பள்ளிக் கல்வித்துறை

# பள்ளியில் குழந்தைகள் பாதுகாப்பு கையேடு

## 2024 – 2025

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை – 6

School Safety Module Final.indd 1 15/10/2024 13:02:09

## எப்படி பயன்படுத்துவது?

*QR Code நுட்பத்தைக் கையேட்டில் பயன்படுத்துவது எப்படி?*

- **உங்கள் திறன் பேசியில், கூகுள் playstore / ஆப்பில் app store இல் QR Code ஸ்கேனர் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக் கொள்க.**
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச்(URL) சொடுக்க, அதன் விளக்கப்பக்கம் திரையில் தோன்றும்.

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | பள்ளிப் பாதுகாப்பு | 01 |
| 2. | உள்கட்டமைப்பு | 03 |
| 3. | நலவாழ்வும் சுகாதாரமும் | 12 |
| 4. | உளவியல் மற்றும் சமூக நோக்கங்கள் | 18 |
| 5. | குழந்தைகள் பாதுகாப்பில் பல்வேறு தரப்பினரின் கடமைகளும் பொறுப்புகளும் | 26 |
| 6. | கண்காணித்தல் | 30 |
| 7. | குழந்தைப் பாதுகாப்பு – சரிபார்ப்புப் பட்டியல் | 33 |

# LIST OF ABBREVIATIONS

| | | |
|---|---|---|
| AMC | – | Annual Maintenance Contract |
| CBSE | – | Central Board of School Education |
| CISCE | – | Council for the Indian School Certificate Examinations |
| CISR | – | Council of Scientific and Industrial Research |
| CWSN | – | Children With Special Needs |
| FCI | – | Food Corporation of India |
| FAQ | – | Frequently Asked Questions |
| FSSAI | – | Food Safety and Standards Authority of India |
| IPC | – | Indian Penal Code |
| IPHS | – | Indian Public Health Standards |
| JJ | – | Juvenile Justice |
| KVS | – | Kendriya Vidyalaya Sangathan |
| MDM | – | Mid-Day Meal |
| MoE | – | Ministry of Education |
| NCPCR | – | National Commission for Protection of Child Rights |
| NVS | – | Navodaya Vidyalaya Sangathan |
| NIDM | – | National Institute of Disaster Management |
| NDMA | – | National Disaster Management Authority |
| NCERT | – | National Council of Educational Research and Training |
| NCTE | – | National Council for Teacher Education |
| NABL | – | National Accreditation Board for Testing and Calibration Laboratories |
| NPNSPE | – | National Programme of Nutritional Support for Primary Education |
| PTA | – | Parent-Teacher Association |
| POCSO | – | Protection of Children from Sexual Offences |
| RTE | – | Right to Education |
| SMC | – | School Management Committee |
| SDMP | – | School Disaster Management Plan |
| SAI | – | Sports Authority of India |
| SS | – | Samagra Shiksha |
| TNSCPCR | – | Tamil Nadu State Commission for Protection of Child Rights |
| UNCRC | – | United Nations Convention on the Rights of the Child |

பிரிவு 1

# பள்ளிப் பாதுகாப்பு

## அறிமுகம்

### முன்னுரை

"பள்ளிப் பாதுகாப்பு" என்பது குழந்தைகள் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று மீண்டும் வீட்டிற்குத் திரும்பும் வரையிலும் பாதுகாப்பாக இருப்பதனைக் குறிப்பதாகும். அம்மாதிரியான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது நம் அனைவரின் கடமையாகும். போக்குவரத்து, பள்ளி வளாகம் மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற கல்வி தொடர்பான நிகழ்வுகளிலும், குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். பள்ளிப் பாதுகாப்பு என்பது அனைத்து விதமான துன்புறுத்தல், வன்முறை, உளவியல்–சமூகப் பிரச்சனை, பேரிடர், இயற்கை மற்றும் மனித செயல்பாடுகளால் ஏற்படும் ஆபத்துகள், தீ மற்றும் போக்குவரத்து விபத்துகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதனைக் குறிக்கிறது. துன்புறுத்தல்களால் உடலாலும், மனதாலும் பாதிக்கப்படும் மாணவர்கள், தாழ்வு மனப்பான்மை மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். குறிப்பாக, குழந்தைகளின் மனநலப் பாதுகாப்பும் முக்கியமானது. ஆசிரியர்களும், பெற்றோர்களும் குழந்தைகளின் மனவெழுச்சிச் சிக்கல்களைக் கண்டறிந்து, அதற்கான தீர்வுகளையும் தர வேண்டும்.

இம்மாதிரியான பாதிப்புகளிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் இக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவத்தின் ஒரு குறிப்பிடத்தக்க காலத்தைப் பள்ளிகளில் செலவிடுவதால், பள்ளிகளில் நேர்மறையான சூழல் இருப்பது கட்டாயமாகும்.

இதுபோன்ற சம்பவங்களைக் கருத்தில் கொண்டு, பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த தற்போதைய வழிகாட்டுதல்களில் ஒரு "பாதுகாப்பு சரிபார்ப்புப் பட்டியல்" தயாராக இருப்பது அவசியம். மேலும், இன்றைய சூழலில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவையான இடங்களில் இக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. இது குழந்தைகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்வதற்கான ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.



### கையேட்டின் நோக்கம்

பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த விரிவான வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான பாதுகாப்பு மற்றும்



School Safety Module Final.indd 1 15/10/2024 13:02:10

பேரிடர்களை எதிர்கொள்ளும் வழிமுறைகள் அடங்கிய ஒரு கையேட்டை NCPCR உருவாக்கியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு இக்கையேடு தமிழில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கையேட்டை முறையாகப் பயன்படுத்துதல்

பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கருத்துகள் ஐந்து முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. அவை:

1. உள்கட்டமைப்பு
2. நலவாழ்வும் சுகாதாரமும்
3. உளவியல் மற்றும் சமூக நோக்கங்கள்
4. குழந்தைகள் பாதுகாப்பில் பல்வேறு தரப்பினரின் கடமைகளும் பொறுப்புகளும்
5. கண்காணித்தல்

இந்தக் கையேட்டின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ள குழந்தைப் பாதுகாப்பு சரிபார்ப்புப் பட்டியல், பள்ளி நிருவாக உறுப்பினர்கள், பள்ளி ஊழியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, பள்ளி அலுவலர்களால் முறைமைப்படுத்தப்பட வேண்டும். இது பள்ளிக் கல்வித் துறையினால் பள்ளிகளில் பாதுகாப்பு தணிக்கை நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்.



School Safety Module Final.indd 2 15/10/2024 13:02:10

பிரிவு

2

# உள் கட்டமைப்பு

## 2.0 முன்னுரை

பள்ளியின் உள்கட்டமைப்பான பள்ளிக்கட்டடம், வளாகம், நுழைவு வாயில் மற்றும் அதைச் சுற்றிய பகுதிகள் இயற்கை இடர்பாடுகளைத் தாங்கி உயிர்ச்சேதம் ஏற்படாத வகையில் கட்டப்படவேண்டும். பள்ளி நிருவாகம், பணியாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ–மாணவிகள், இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படும் இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கான விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும். பள்ளி உள்கட்டமைப்பு என்பது பள்ளிக்கட்டடம், விளையாட்டு மைதானம், நீர்நிலைகள், மின்சாரம் மற்றும் தீப் பாதுகாப்பு சாதனம், போக்குவரத்து போன்ற பல்வேறு அமைப்புகளை உள்ளடக்கியது.


## 2.1 பள்ளிக்கட்டடம்

**மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்கு உகந்த வழிமுறைகள்**

1. பள்ளிக் கட்டடம் மாணவ, மாணவிகள் பள்ளியில் படிப்பதற்கு பாதுகாப்பானது என்று உள்ளாட்சி நிருவாகத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். பள்ளிக்கட்டடம் செங்கல் / கற்களால் கட்டப்பட்ட சுவராலும், RCC கூரை உடைய முதல்தர கட்டடமாகவும் இருக்கவேண்டும்.
2. மழலையர் மற்றும் ஆரம்பநிலை வகுப்புகள் தரைதளத்தில் இருக்க வேண்டும்.
3. ஒரு பள்ளியின் அதிகப்படியான தளம் தரைதளத்திலிருந்து மூன்றுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. பள்ளிக்கட்டடம் எளிதில் தீப்பற்றக்கூடிய நச்சுத்தன்மையுடைய பொருள்களிலிருந்து தூரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும்.



5. ஒட்டுமொத்தமாக ஒரு பள்ளிக் கட்டடம் குழந்தைநேயமிக்க கட்டடமாக இருக்க வேண்டும். அதாவது, குழந்தைகளின் வயதிற்கேற்ற வகையில் அவர்களுக்குப் பிடித்தமான வண்ணங்களில், பிடித்தமான கலைநயமிக்க ஓவியங்கள்/படங்கள் சுவரில் வரையப்பட வேண்டும்.
6. வகுப்பறைக்குள் குழந்தைகளின் படைப்பாற்றலைத் தூண்டும் வகையிலான சுவர் சித்திரங்கள் இருக்கவேண்டும்.



### குழந்தைகளுக்கான பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ பள்ளியின் அனைத்துப் பகுதிகளையும் முழுமையாக சுத்தம் செய்து கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி அங்குள்ள தளவாடச் சாமான்கள், துணைக் கருவிகள், எழுதுபொருள்கள்,



School Safety Module Final.indd 3 15/10/2024 13:02:10

சேமிப்புக்கிடங்குகள், தண்ணீர்தொட்டிகள், சமையலறைகள், உணவகங்கள், கழிவறைகள், பரிசோதனைக் கூடங்கள், நூலகங்கள் போன்றவை சுத்தம் செய்யப்பட்டு காற்றோட்டமாக இருக்க வேண்டும்.

❖ கைகளை அடிக்கடி கழுவுவதற்கு ஏற்ற வசதிகள் பள்ளியில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

❖ பெரிய அரங்குகளிலும், ஆசிரியர்கள் குழுவாக அமரும் அறையிலும், பிற அறைகளிலும் போதுமான இடைவெளி விட்டு இருக்கை வசதிகள் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.


❖ பள்ளிக் கட்டடத் தளவாடங்களைத் தொடர்ந்து சுத்தம் செய்து கிருமிநாசினி தெளித்தல் வேண்டும்.

## 2.2 பள்ளி வகுப்பறை

**கல்வி அமைச்சகத்தால் (MoE) பள்ளி வகுப்பறைப் பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள்:**



1. பள்ளி வகுப்பறையின் சுகாதாரத்தைப் பராமரிப்பதற்காக குறிப்பிட்ட கால இடைவெளியில் வர்ணம் பூசி சுத்தம் செய்யப்பட வேண்டும். சாளரங்களில், உடைந்த கண்ணாடிகளும் கம்பிகள் வெளியே நீட்டிக் கொண்டும் இருக்கக் கூடாது.
2. வகுப்பறையின் தளம் உடைந்தோ, சமதளமின்றியோ இருக்கக் கூடாது. இவை தேவையான காலக் கட்டங்களில் சரி செய்யப்பட வேண்டும்.
3. கரும்பலகை மாணவர்களின் நேர்ப்பார்வையில் இருக்கும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும். அதில் எழுதும் வாசகங்கள் தெளிவாக இருக்க வேண்டும்.



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ வகுப்பறையில் காற்றோட்டம் நன்றாக இருக்க சன்னல்களும் கதவுகளும் திறந்தே வைத்திருக்கப்பட வேண்டும்.

❖ தினசரி கற்பித்தல் வளங்களைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தும்போது, போதிய இடைவெளி மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளையும் மனதில் கொள்ள வேண்டும்.

❖ மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அவர்களைப் பெரிய வகுப்பறைகளில் போதிய இடைவெளியில் அமரவைத்து கற்பிக்கலாம்.

## 2.3 ஆய்வகம்

**ஆய்வகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகளின்படி அமைக்கப்பட வேண்டும்.**

1. ஆயுட்காலம் முடிந்த எந்த ஒரு வேதிப்பொருளும் ஆய்வகத்தில் இருக்கக் கூடாது.
2. சில வேதிவினைகளின்போது புகை உள்ளிட்ட வாயுக்கள் மற்றும் வெப்பம் வெளிப்படும். ஆதலால், மாணவர்கள் அதை பாதுகாப்பாக கையாளும் வண்ணம், பாதுகாப்பு உடைகள் மற்றும் அதற்கான கருவிகள் வைக்கப்பட வேண்டும்.
3. ஆய்வகங்களில் முதலுதவிப் பெட்டி (First Aid Box) பயன்பாட்டில் வைக்கப்பட வேண்டும்.
4. வாயுக்கள் வெளியேறும் வகையில் வெளியேற்றி (Exhauster) வசதி அமைக்கப்பட வேண்டும்.





School Safety Module Final.indd 4 15/10/2024 13:02:11




### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ ஆய்வகப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி அறிவியல் செயல்முறைப் பயிற்சிகள் செய்யப்பட வேண்டும்.

## 2.4 சமையல் அறை

1. தரை மற்றும் சுவர்களைத் தரமான கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தும், சுற்றுப்புறத்தில் பூச்சிகள் வராமலும் பாதுகாத்தல் வேண்டும். சத்துணவு சமைக்கும்போது எவ்விதமான தெளிப்பான்களையும் பயன்படுத்தக்கூடாது. அதற்குப் பதிலாக ஈக்களைக் கொல்வதற்கு மின் சாதனங்களைப் பயன்படுத்துதலும், சாளரங்கள், கதவுகள் மற்றும் திறப்பு உள்ள இடங்களில் பூச்சிகள் வராதவாறு வலைகள் அமைத்தலும் வேண்டும். சமையலுக்குப் பாதுகாக்கப்பட்ட தூயகுடிநீரைப் பயன்படுத்துதல் வேண்டும்.
2. சமையல் பாத்திரங்கள், மேசைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் பாகங்கள் போன்றவற்றைச் சுத்தமாக வைத்தல் வேண்டும். பூஞ்சைகள் மற்றும் கிருமிகளிடமிருந்து பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்துப் பாத்திரங்களையும் சுத்தமாகக் கழுவி, உலர வைத்து பாதுகாப்பறையில் வைத்தல் வேண்டும். அனைத்துப் பாத்திரங்களையும் முறையாக தூய்மை செய்து பயன்படுத்துதல் வேண்டும்.
3. குப்பைகள், கழிவுநீர், கழிவறை வசதிகள், திறந்த கழிவுநீர்க் கால்வாய்கள், விலங்குகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து சமையலறை பாதுகாக்கப்பட வேண்டும். சமையல் அறையின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து எளிதில் செல்வதற்கு வசதியாக வகுப்பறைகளிலிருந்து தனியாக அமைத்தல் வேண்டும்.
4. புகைப் போக்கிகளுடன் கூடிய சமையலறைகள் அமைக்கப்பட வேண்டும். இவற்றின் வழியே பூச்சிகள், எலி, பெருச்சாளி போன்றவை சமையலறைக்குள் வராதவாறு வலைகளைப் பொருத்த வேண்டும். தீ அபாயத்தைத் தடுக்க, எரிபொருள் பாதுகாப்பான இடத்தில் சேமிக்கப்பட வேண்டும். முடிந்தவரை புகையில்லா அடுப்புகளை பயன்படுத்துதல் நன்று.



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ சமையலறையிலும் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

❖ குறைந்தபட்ச மற்றும் அவசியமான பணியாளர்களை மட்டுமே சமையல் அறைக்குள் அனுமதிக்க வேண்டும்.

❖ சமையலறையில் தூய்மை மற்றும் அங்கே பணிபுரியும் பணியாளரின் தன்சுத்தம் உறுதி செய்யப்பட வேண்டும்.

❖ சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையலறையைச் சுத்தம் செய்யும் போதும், பாத்திரங்கள் கழுவும்போதும், காய்கறிகள் நறுக்கும்போதும், சமைக்கும் போதும், உணவு பரிமாறும்போதும் முகக்கவசம், தலைமுடியைப் பாதுகாக்கும் கவசம் அணிந்து இருக்க வேண்டும். வீட்டில் தயாரிக்கப்பட்ட முகக்கவசம் என்றால் அதைத் தினமும் தண்ணீரில் அலசி சுத்தப்படுத்திய பிறகு பயன்படுத்த வேண்டும்.

## 2.5 கழிவறை

1. பள்ளி வளாகத்திற்குள்ளேயே கழிவறை அமைக்கப்பட வேண்டும்.
2. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு எனத் தனித்தனியாகக் கழிவறைகள் அமைக்கப்பட வேண்டும்.
3. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பெண்கள் கழிவறைகளுக்கு அருகில் எரியூட்டி (Incinerator) அமைப்பு ஏற்படுத்த வேண்டும்.



School Safety Module Final.indd 5 15/10/2024 13:02:11

4. பள்ளிகளில் கழிவுகள் அப்புறப்படுத்துவதில் அறிவியல் அணுகுமுறையைக் குறிப்பாக பெண்கள் கழிவறைகளில் பின்பற்ற வேண்டும்.

5. கழிவறைகள் தினமும் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

6. கைகளைக் கழுவ மாணவர்களுக்கு சோப்பு வழங்க வேண்டும்.





### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ கழிவறைகளில் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் கூடுவதைத் தவிர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

❖ பள்ளி நேரங்களில் கழிவறைகளை அடிக்கடி சுத்தம் செய்து கிருமிநாசினி கொண்டு சுத்திகரிப்பு செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

❖ கழிவறைக்குச் செல்லும் முன்னரும் பின்னரும் கைகளைக் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

## 2.6 குடிநீர்

**கல்வி அமைச்சக (MoE) சுற்றறிக்கைகள் மாணவ/மாணவிகளுக்குச் சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்கு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளன.**

❖ பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டிகள் / கொள்கலன்கள் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட வேண்டும்.

❖ குறிப்பிட்ட கால இடைவெளியில் குடிநீரின் பாதுகாப்பு மற்றும் தரத்தினை உரிய துறை அலுவலகம் மூலம் சோதித்து, குடிநீரின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும்.





### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ பள்ளி வளாகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். நாள் முழுவதும் தொடர்ந்து தண்ணீர் கிடைக்காத இடங்களில் உணவு தயாரிக்கவும், கைகளைக் கழுவவும், சுத்தப்படுத்தவும், தண்ணீரைச் சேமித்து வைக்கவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து இருக்க வேண்டும். சுத்தம் செய்ய, கைகளைக் கழுவ மற்றும் உணவு தயாரிக்க பாதுகாக்கப்பட்ட குடிநீர் பயன்படுத்தப்பட வேண்டும்.

❖ தண்ணீர் சேமிப்புத் தொட்டிகள் இருந்தால் பள்ளி திறப்பதற்கு முன்னர் சுத்தம் செய்யப்பட வேண்டும். பள்ளி திறந்த பின்னர் குறிப்பிட்ட கால இடைவெளியில் தண்ணீர்த் தொட்டியை மீண்டும் சுத்தம் செய்ய வேண்டும்.

## 2.7 மின்சாதன அமைப்பு மற்றும் பாதுகாப்பு

**மின்சாதன அமைப்பு மற்றும் பாதுகாப்புத் தன்மைகள் குறித்த வழிகாட்டுதல்கள்:**

மின்சாதனங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை சோதனை செய்யப்பட வேண்டும்.



School Safety Module Final.indd 6 15/10/2024 13:02:11

1. மின்சாதன அமைப்புகளை அதற்காக நியமிக்கப்பட்டவர்கள் மட்டுமே கையாள வேண்டும். எந்தக் காரணத்திற்காகவும் மாணவர்களை மின் சாதனங்களைக் கையாள அனுமதிக்கக் கூடாது.

2 மின் கம்பிகள் மற்றும் மின் இணைப்புகள் முறையாக அமைக்கப்பட வேண்டும். ஏதேனும் மின் கம்பிகள் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தால் அவற்றை சரிசெய்யும் வரை மின் இணைப்புத் துண்டிக்கப்பட வேண்டும்.

3. மின் இணைப்பில் உள்ள குறைபாடுகள் உடனடியாக சரிசெய்யப்பட வேண்டும்.

4. மின் சாதனங்களின் பழுதுகளைப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு மட்டுமே சரிபார்க்க வேண்டும்.

5. மின்சாரக் கம்பிகளுக்குக் கீழே மரங்கள் இருக்குமானால், அவை மின்கம்பிகளில் உராய்ந்து தீப்பற்றிவிடாத வண்ணம் மரத்தின் கிளைகளை அவ்வப்போது அகற்றிப் பராமரிக்க வேண்டும்.

6. மாணவ/மாணவிகள் மின்கம்பங்களைத் தொடக்கூடாது என்று எச்சரிக்கப்பட வேண்டும். அதைச்சுற்றி சிறிய வளையம் போன்ற அமைப்பை அமைக்க வேண்டும்.

7. முடிந்தவரை இடிதாங்கிகள் அமைத்தல் நலம்.

## 2.8 தீத்தடுப்பு மேலாண்மை

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை:**

1. பள்ளி வளாகத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எளிதில் பார்க்கும்படி உள்ளூர் தீயணைப்பு நிலைய தொலைபேசி எண் பெரிய எழுத்துகளில் எழுதி வைக்கப்பட வேண்டும்.

2. பள்ளி வளாகத்தில் தேவையற்ற பொருள்கள் / குப்பைகளைச் சேமித்து வைக்கக்கூடாது.

3. தீயணைப்புக்கருவிகள், தீ மற்றும் புகைஉணர் கருவிகள் பள்ளிகளில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. தீயணைப்புசார் நிறுவனங்களின் உதவியோடு அவசரகால ஒத்திகைப் பயிற்சி நடத்தப்பட வேண்டும்.

5. ஆரம்பநிலை தீ அபாயத்தைக் கையாள பயிற்சி பெற்ற குழு அமைக்கப்பட வேண்டும்.

### செயல்பாடு

1. வருடத்திற்கு குறைந்தது ஒருமுறை உள்ளூர் தீயணைப்பு நிலைய மேற்பார்வையில் தீப் பாதுகாப்பு ஒத்திகை (Fire Drill) நடத்தப்பட வேண்டும்.

2. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வகுப்பு வாரியாக உள்ளூர் தீயணைப்பு நிலையத்திற்குச் சென்று தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் குறித்த விழிப்புணர்வைப் பெற வேண்டும்.

## 2.9 விளையாட்டு மைதானம்

மாணவர்களின் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் பரிந்துரையின்படி, விளையாட்டு மைதானம் பள்ளியின் கட்டாய அங்கமாகக் கருதப்படுகிறது.



1. மைதானம் நன்முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

2. மைதானத்திற்குள் வெளிநபர்களோ/ கால்நடைகளோ நுழையா வண்ணம் சுற்றுச்சுவர் / நுழைவு வாயில் அமைக்கப்பட வேண்டும்.

3. பார்வையாளர் மாடத்தின் மேற்கூரை கான்கிரீட் அல்லது தீப்பிடிக்காத, வலிமை வாய்ந்த பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டு இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.



School Safety Module Final.indd 7 15/10/2024 13:02:11

4. விளையாட்டுத்திடல் மணற்பாங்காக இருக்கும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும். அவ்வப்போது கற்கள் இல்லாதவாறு சுத்தம் செய்யப்பட வேண்டும். மாணவர்கள் தவறி விழுந்தாலும் பெரிதும் காயம் ஏற்படாதவாறு பராமரிக்கப்பட வேண்டும்.



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

1. விளையாட்டுப் பொருள்கள், ஊஞ்சல்கள், உட்காரும் பலகைகள், நாற்காலிகள் மற்றும் அடிக்கடி தொடப்படும் இடங்களையும் பொருள்களையும் அவ்வப்போது கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்திட வேண்டும்.
2. விளையாட்டுப் பயிற்சியின்போது ஏற்படும் ஆபத்துகளை எதிர்கொண்டு கையாளும் பொறுப்பை உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பள்ளிப் பணியாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.
3. சில குறிப்பிட்ட விளையாட்டுப் பயிற்சிகளின் போது இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) வரையறுத்துள்ள பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## 2.10 சுற்றுச் சுவர் மற்றும் வாயில்கதவு

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் – 2009 ஆனது ஒவ்வொரு பள்ளியிலும் சுற்றுச்சுவர் அல்லது வேலி அமைக்கப்பட வேண்டியதை உறுதி செய்கிறது. இதற்கான MoE இன் தெளிவான வழிகாட்டுதல்கள்.

1. ஒருவர் தாண்ட முடியாத அளவிற்கு சுற்றுச்சுவர் உயரமாகவும் அதற்கு மேல் முள்வேலியும் அமைந்திருக்க வேண்டும்.
2. அவசர நிலையில் மாணவர்கள் வெளியேறும் வகையில் மூன்று அல்லது நான்கு வாயிற்கதவுகள் சுற்றுச்சுவரின் வெவ்வேறு பகுதியில் அமைந்திருக்க வேண்டும்.
3. சிறப்புக் கண்காணிப்புப் புகைப்படக்கருவிகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் மாணவ, மாணவியர் பள்ளியினுள் நுழையும் மற்றும் வெளியேறும் நேரத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
4. மாணவ / மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் வெளியேறும் நேரத்தில் அனைத்து வாயிற்கதவுகளும் திறக்கப்பட வேண்டும்.

## 2.11 பள்ளி வளாகம் மற்றும் சுற்றுப்புறச் சூழல்

1. பள்ளிகள் தொழிற்சாலை மற்றும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய வேதித் தொழிற்சாலைகளுக்கு அருகில் அமைந்திருந்தால் அப்பள்ளி மாணவ / மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்த வேதிப்பொருள்களைப் பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். வேதிக்கசிவுகள் ஏற்படும்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. மாணவ / மாணவிகளின் பாதுகாப்பிற்குத் தேவையான முதலுதவி மற்றும் மருத்துவ வசதிகள் பள்ளியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
3. பள்ளிக்கு அருகில் மதுபான மற்றும் போதைப்பொருள்களின் விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

## 2.12 மாற்றுத்திறனாளிகளுக்கு ஏதுவான வசதிகளை ஏற்படுத்துதல்

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான சிறப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான பள்ளிச்சூழலை உருவாக்குவதற்கான MoE இன் வழிகாட்டுதல்கள்.

1. மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுப் பாதை கீழ்க்காணும் இடங்களில் அமைக்கப்பட வேண்டும்.



School Safety Module Final.indd 8 15/10/2024 13:02:11

➢ கழிவறைகள்
➢ பள்ளி நுழைவு வாயில்
➢ பள்ளி வகுப்பறைகள்
➢ ஓய்வறைகள்
➢ விளையாட்டுத் திடல்
➢ உணவகம்
➢ நூலகங்கள்
➢ அரங்கம்
➢ ஒரு தளத்திலிருந்து மற்றோர் தளத்திற்குச் செல்லும் வழி



2. சாய்வுப்பாதையின் இருபுறங்களிலும் கைப்பிடி அமைக்கப்பட வேண்டும்.
3. அவசர காலங்களில் வெளியேறும் போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் பிரெய்லி எழுத்து முறையிலும் (Braille) தயாரிக்கப்பட வேண்டும்.

**மேலும், கீழ்க்காணும் முக்கிய வழிமுறைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.**

i. மாற்றுத்திறனாளிகள் பற்றிய விவரங்களைப் பள்ளியில் கட்டாயமாக சேகரித்து வைக்க வேண்டும்.
ii ஆபத்துக் காலங்களில் மாற்றுத்திறனாளி களுக்கு உதவுவதற்கான பயிற்சிகள் ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டும்.


## 2.13 மாணவ / மாணவிகள் நீர்நிலைகளில் மூழ்கும் அபாயத்தைத் தவிர்க்கத் தெளிவான வழிகாட்டுதல்கள்

1. பள்ளி வளாகத்தில் கிணறுகள் மற்றும் நீர்நிலைகள் இருப்பின் அவற்றைச் சுற்றி பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டு கம்பி வலைகள் அமைக்கப்பட்டு அதனருகே மாணவர்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.
2. மாணவ / மாணவியர் ஆறு, குளம், வாய்க்கால்கள் மற்றும் அருகிலுள்ள இருப்புப்பாதை ஆகிய பகுதிகளுக்குச் செல்லாமல் இருப்பதை உறுதி செய்யவேண்டும். மாணவ / மாணவிகள் மொட்டை மாடிகளில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குளிக்காத வண்ணம் மாடிப்படிகள் இரும்பு வலைகளால் தடுக்கப்பட்டு பூட்டப்பட வேண்டும்.
3. மாணவர்களுக்குள்ளேயே குழுக்கள் அமைக்கப்பட்டு மாணவ / மாணவியரின் நடமாட்டம் கண்காணிக்கப்பட வேண்டும்.

## 2.14 கட்டடப் பணிகள் பள்ளி வளாகத்தில் நடைபெறும் போது மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டுதல்கள்

1. பள்ளி வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கும் பராமரிப்புப் பணி மேற்கொள்வதற்கும் முறையாக அனுமதி பெற வேண்டும்.
2. பள்ளி வளாகத்தில் கட்டடப் பணி நடக்கும் போது மாணவர்களின் நடமாட்டத்தைத் தவிர்க்க தடுப்புகளும் எச்சரிக்கை பதாகைகளும் வைக்கப்படவேண்டும்.
3. கட்டடப் பணிக்குத் தேவையான தண்ணீர் தொட்டிகளை மாணவ / மாணவிகளின் பாதுகாப்புக் கருதி, மூடிப் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

## 2.15 விழாக்காலங்களில் பாதுகாப்பு



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ பள்ளிகளில் பண்டிகைகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பாதுகாப்புடன் நடத்த வேண்டும்.

## 2.16 பள்ளிப்பேருந்துப் பாதுகாப்பு

### அ பேருந்தின் வெளிப்புறத்தில்

1. பள்ளிப்பேருந்துகளின் நிறம் மஞ்சள் வண்ணத்திலும் பேருந்தின் இருபுறமும்



School Safety Module Final.indd 9 15/10/2024 13:02:11

பள்ளியின் பெயர் பெரிய எழுத்துகளிலும் எழுதப்பட வேண்டும்.

2. பள்ளி வாகனத்தின் முன்னும் பின்னும் "SCHOOL BUS" என்று பெரிய எழுத்துகளிலும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனமெனில் "ON SCHOOL DUTY" என்றும் எழுதப்பட வேண்டும்.
3. பள்ளிப்பேருந்தில் பள்ளியின் தொலைபேசி எண் மற்றும் பள்ளியுடன் தொடர்புடைய தனிநபர் தொலைபேசி எண்கள் பெரியதாக எழுதப்பட வேண்டும்.




## ஆ. பேருந்துகளில் உள்கட்டமைப்பு

1. பள்ளி வாகனத்தின் ஜன்னல்களில் படுக்கை வாட்டத்தில் கம்பிகள் அமைக்கப்பட்டு வலையால் மூடப்பட வேண்டும்.
2. பேருந்தின் கதவுகளில் தரமான பூட்டு வசதி பொருத்தப்பட வேண்டும்.
3. பள்ளிப்பேருந்துகள் மணிக்கு 40 கிலோமீட்டருக்கு மேல் செல்லாமலிருப்பதை உறுதி செய்ய, வேகக்கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும்.
4. பேருந்தில் தீத்தடுப்பு சாதனம் கட்டாயம் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
5. முதலுதவிப் பெட்டி மருந்துகளுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

## இ. பேருந்து ஊழியர்கள்

1. காவல்துறை சரிபார்த்தல் சான்றிதழ் பெற்றுள்ள ஓட்டுநர்கள் மட்டுமே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.
2. பள்ளிப் பேருந்தில் குழந்தைகளைக் கண்காணிக்க உதவியாளர்கள் (குறிப்பாக பெண்) பணியில் அமர்த்தப்பட வேண்டும்.
3. பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்ய பள்ளி நிருவாகம் தனிப்பட்ட மேலாளரை நியமிக்க வேண்டும்.
4. மாணவ / மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய பள்ளிப் பேருந்தில் ஆசிரியர்களையும் பயணம் செய்ய பணிக்க வேண்டும். நடத்துநர் மற்றும் மாணவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாவலர்கள் தவிர, பிறரைப் பள்ளி வாகனத்தில் பயணம் செய்ய அனுமதிக்கக்கூடாது.
5. ஒவ்வொரு ஆண்டும் ஓட்டுநர்கள் உடல் நல பரிசோதனை மற்றும் கண் பரிசோதனை செய்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

## ஈ. பள்ளிகளில் செய்யப்பட வேண்டிய வசதிகள்

1. சாலைப் பாதுகாப்பு வாரத்தில் மாணவ / மாணவிகளைக் கொண்டு பொது மக்களின் விழிப்புணர்வுக்காக நாடகம் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும்.
2. பள்ளி வாகன ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் பற்றிய மாணவர்களின் கருத்துகள் அவ்வப்போது கேட்டு அறியப்பட வேண்டும்.



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ பள்ளிப் பேருந்தில் பயணம் செய்யும் மாணவர்கள் போதியப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.



School Safety Module Final.indd 10 15/10/2024 13:02:11

❖ பள்ளி வாகனங்களை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது கிருமிநாசினி கொண்டு சுத்திகரிக்க வேண்டும். குழந்தைகள் வாகனத்தில் ஏறுவதற்கு முன்னரும் வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்ற பின்னரும் வாகனம் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

❖ பேருந்து ஜன்னல்களைத் திரைச்சீலையால் மூடக்கூடாது.

❖ பேருந்து ஜன்னல்களைத் திறந்து வைத்து இருப்பது விரும்பத்தக்கது.



School Safety Module Final.indd 11 15/10/2024 13:02:11

பிரிவு 3

# நலவாழ்வும் சுகாதாரமும்



## 3.1 முன்னுரை

இந்தியப் பொதுச்சுகாதார தர நிர்ணய அமைப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பள்ளி மாணவர்களின் உடல்நலம், சுகாதாரம், நலவாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் இப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன.

1. மாணவர்களின் உடல்நலம் தொடர்பான இரத்தசோகை, ஊட்டச்சத்து அளவு, பார்வைக் கூர்மைத்திறன், காது கேட்கும் திறன், பற்கள் பரிசோதனை, பொதுவான தோல் பரிசோதனை, இதய இயக்கம், உடற் குறைபாடுகள், பிறநோய்கள், கற்றல் குறைபாடு, நடத்தைச் சிக்கல்கள் ஆகியவற்றை பள்ளிகளில் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கட்டாயம் பரிசோதிக்க வேண்டும்.
2. பள்ளி செல்லும் மாணவர்களுக்கு அன்றாடம் ஏற்படும் உடல் உபாதைகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அடிப்படை மருந்துகளடங்கிய முதலுதவிப் பெட்டி (First Aid Box) பள்ளிகளில் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்.
3. சிறப்புக்கவனம் செலுத்தப்பட வேண்டிய மாணவர்கள் அந்தந்த சிறப்பு மருத்துவர்களிடம் பரிந்துரைக்கப்பட வேண்டும்.
4. உடல்நலமற்ற குழந்தை எனக் கண்டறியப்பட்டவுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியான சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் சிகிச்சைக்குப் பரிந்துரைக்க வேண்டும். அக்குழந்தைக்கு மேற்சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என மருத்துவர் கருதினால் மாவட்ட அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அக்குழந்தையின் பெற்றோருக்கு உரிய தகவல் அளித்தல் வேண்டும்.

## 3.2 நோய்த்தடுப்பு

### IPHS பரிந்துரைகளின்படி

1. தொற்று நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் விதமாக பள்ளிகளில் தட்டம்மை, பொன்னுக்கு வீங்கி போன்றவற்றிற்குத் நோய்த்தடுப்பு முகாம்கள் அமைத்து தடுப்பூசிகளைப் போட வேண்டும்.

   அ) நரப்பிசிவு நோய் (Tetanus), தொண்டை அழற்சி, கக்குவான், இளம்பிள்ளை வாதம் ஆகிய நான்கு வியாதிகளுக்கும் ஒரே தடுப்பூசி போட வேண்டும்.

   ஆ) நரப்பிசிவு நோய் (Tetanus), தொண்டை அழற்சி, கக்குவான் – DTP தடுப்பூசி.

   இ) மனித பாப்பில்லோமா வைரஸ் – HPV தடுப்பூசி.

   ஈ) மூளைச்சவ்வு அழற்சி – MENCEVAX ACWY தடுப்பூசி.

2. பள்ளிகளில் தடுப்பூசிகள் அளிப்பதை தேசிய அட்டவணைப்படி உறுதிப்படுத்த வேண்டும்.



School Safety Module Final.indd 12 15/10/2024 13:02:12

## 3.3 நுண்ணூட்டப் பொருள்கள் Vitamin A & IFA மேலாண்மை

NP–NSPE 2006 (சத்துணவுத் திட்டம்) பள்ளிக் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்து விவாதிக்கின்றது. மேலும், இவற்றோடு சேர்த்து பொருத்தமான நுண்ணூட்டச் சேர்மானங்கள் அளிப்பது மற்றும் குடற்புழு நீக்கம் செய்யவும் வலியுறுத்துகின்றது.

1. குடல்புழு நீக்கத்திற்கான ஆறு மாத மருந்துகள்மற்றும் Vitamin A சேர்மானங்கள் அடங்கிய மருந்துகள் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும்.
2. அந்தந்த பகுதிகளில் உள்ள உடற்குறைபாடுகளுக்கு ஏற்ப வாரந்தோறும் இரும்பு, ஃபோலிக் அமிலம், துத்தநாகம் மற்றும் ஏனைய பொருத்தமான சேர்மானங்கள் அடங்கிய மாத்திரைகள் குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும். அயோடின் கலந்த மற்றும் செறிவூட்டிய (இரும்பு மற்றும் அயோடின்) உப்பையே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

## 3.4 சுத்தம் மற்றும் சுகாதாரம்

தூய்மைப் பாரதம் மற்றும் தூய்மைப் பள்ளி வழிகாட்டுதல்கள், பள்ளிகளில் மாணவர்களின் சுகாதாரத்தைப் பேண எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளாக கீழ்க்காண்பவற்றைப் பரிந்துரைக்கின்றன.

### அ) கழிவறைகள்

ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி கழிவறைகள் அமைக்கப்பட வேண்டும். ஒரு கழிப்பிட அலகானது ஒரு கழிவறையையும் மூன்று சிறுநீர்ப் பிறைகளையும் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு 40 மாணவர்களுக்கும் ஓர் அலகுக் கழிவறை என்ற விகிதத்தில் அமைக்கப்பட வேண்டும்.

1. கழிவறையில் அமரும் பகுதி (Suitable sitting Area) தூய்மைப்படுத்துவதற்கு ஏதுவான பகுதியாகவும் போதுமான தண்ணீர் வசதியுடன் கூடிய இடமாகவும் இருத்தல் வேண்டும்.
2. இயற்கையான வெளிச்சத்துடனும் காற்றோட்டத்துடனும் கூடியதாக கழிவறை வளாகம் இருத்தல் வேண்டும்.
3. குழந்தைகள் இயக்குவதற்கு ஏதுவாக தாழ்நிலைத் தாழ்ப்பாள்களுடன் கூடிய கதவுகள் அமைக்கப்படல் வேண்டும்.
4. சிறப்புத் தேவையுடைய குழந்தைகள் (CWSN) பயன்படுத்தக்கூடிய சிறப்பு வசதிகளுடன் கூடிய கழிவறை குறைந்த பட்சம் ஒன்று இருத்தல் வேண்டும்.
5. குறைந்தபட்சம் ஒரு எரியூட்டி (Incinerator) பெண்கள் கழிவறை வளாகத்தில் இருக்க வேண்டும். பயன்படுத்திய சானிட்டரி நாப்கின்களைச் (Sanitary napkins) சேகரிக்க உரிய கலன்கள் அமைக்கப்பட வேண்டும்.

### ஆ) மாதவிடாய் சுகாதார மேலாண்மை

மாணவிகளின் சுகாதார மேலாண்மைக்குத் தேவையான வசதிகளான சோப்பு, சானிட்டரி நாப்கின்களை மாற்றுவதற்குப் போதுமான தனிப்பட்ட இடவசதி மற்றும் அக்கழிவுகளை அப்புறப்படுத்தத் தேவையான வசதிகளான எரியூட்டி மற்றும் குப்பைத்தொட்டி முதலானவை உள்ளதை பள்ளிகள் ஒவ்வொன்றும் உறுதிப்படுத்த வேண்டும்.

### இ) கைகளைக் கழுவுதல்




MoE ஆல் சத்துணவுக்கு (MDM) வழங்கியுள்ள வழிகாட்டுதலில் பள்ளிக் குழந்தைகள் கைகள் கழுவுவதின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி கீழ்க்காணும் வசதிகளை உறுதிசெய்வது வலியுறுத்தப்பட்டுள்ளது.



School Safety Module Final.indd 13 15/10/2024 13:02:12

1. சத்துணவு சாப்பிடும் குழந்தைகளும் சத்துணவு வழங்கும் ஊழியர்களும் தினமும் சாப்பாடு வழங்கும்முன் சோப்பினால் கைகளைக் கழுவ வேண்டும்.
2. கைகளைக் கழுவும் இடமானது எளிதில் அணுகக்கூடிய, குறைவான தண்ணீரைப் பயன்படுத்த ஏதுவாகவும் அமைக்கப்படல் வேண்டும்.
3. கைகளைக் கழுவும் நிகழ்வானது சுகாதாரம் தொடர்பான செய்திகளை, அவசியமான நேரங்களான, சாப்பிடும்முன் மற்றும் கழிவறையைப் பயன்படுத்தியபின் கைகள் கழுவுவதன் அவசியத்தைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.
4. சத்துணவு சாப்பிடுவதற்கு முன் பள்ளிக் குழந்தைகளும் ஆசிரியர்களும் கைகளைக் கழுவிட 10 முதல் 12 நிமிடங்களை ஒதுக்க வேண்டும்.



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

- ❖ கைகளைக் கழுவும் இடங்கள் அனைத்திலும் சோப்பும் சுத்தமான தண்ணீரும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

content 1

- ❖ குறைந்தபட்சம் 40 வினாடிகள் உணவு உண்ணுவதற்கு முன்னரும் பின்னரும் கைகளைச் சோப்புப் போட்டு அழுத்தித் தேய்த்துக் கழுவ வேண்டும்.
- ❖ கைகளைக் கழுவும் செயல்பாடுகளை ஆசிரியர் கவனமாக மேற்பார்வையிட வேண்டும்.
- ❖ எங்கெல்லாம் முறையான கைகளைக் கழுவும் வசதிகள் இல்லையோ அங்கே வாளிகளும், நெகிழிக் குவளைகளும் கொண்டு கூடுதலாக தண்ணீர் வைக்கப்பட வேண்டும்.

### ஈ) குடிநீர்

பள்ளிக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான குடிநீர் அளிப்பதன் முக்கியத்துவத்தை முன்னிலைப் படுத்தி MoE வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.



1. பள்ளியைச் சுத்தம் செய்யவும், உணவு தயாரிக்கவும், கைகளைக் கழுவவும் போதுமான நீர் வழங்குவதுடன், குடிநீரைப் பராமரித்துப் பாதுகாப்பாக சேமித்துப் பயன்படுத்தும் வகையில் பள்ளி முழுவதும் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
2. குடிநீர் பருகத் தகுந்ததாக உள்ளதா? என்பதையும் பூமிக்கடியில் உள்ள நீர் பயன்படுத்தப்பட்டால் தேவையான வடிகட்டல் மற்றும் சுத்திகரித்தலுக்கு உட்படுத்தப்பட்டதா? என்பதையும் பள்ளி அலுவலர்கள் மாவட்ட அளவிலுள்ள அமைப்புகளின் உதவியோடு ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும்.
3. குடிநீருக்குப் பயன்படுத்தப்படும் நீர் ஆதாரம் பள்ளி அருகிலுள்ள வீடுகள் அல்லது சாக்கடைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய்களிலிருந்து குறைந்தது 10 மீட்டர்களுக்கு அப்பால் அமைக்கப்பட வேண்டும்.


School Safety Module Final.indd 14 15/10/2024 13:02:12

## 3.5 சத்துணவு: உணவுப் பாதுகாப்பும் சுகாதாரமும்

அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தின் மூலம், சமைத்த சூடான சத்துணவு அரசின் நிதி உதவியுடன் வழங்கப்படுகிறது.

சத்துணவானது போதுமான சத்துகள் நிறைந்ததாகவும், சுவையாகவும் சுகாதாரமானதாகவும் இருக்க வேண்டும். உணவுப் பாதுகாப்பு வழிமுறைகள் பள்ளி அளவில் சத்துணவைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட வேண்டும்.

content 2



## 3.6 சத்துணவு – பாதுகாப்பு மற்றும் சுகாதாரமாக சமைத்தல்

உணவின் தரத்தை நிர்ணயிப்பதில் சுகாதாரமும் பாதுகாப்பு நடைமுறைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

### அ) உணவு தயாரிப்பில் பாதுகாப்பு முறைகள்.



**பாதுகாப்பு நெறிமுறைகள்:**

❖ காய்கறிகளை நன்றாகக் கழுவிய பின்னரே பயன்படுத்த வேண்டும். உப்பு மற்றும் மஞ்சள் கலந்த தண்ணீரில் அல்லது நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரில் அவற்றைக் கழுவி கிருமிகள் மற்றும் மாசுக்களை நீக்க வேண்டும்.

❖ உணவு தானியங்கள், பருப்புகள் பயன்படுத்துவதற்கு முன் கழுவப்பட வேண்டும்.

### ஆ) சமையல் செய்யும்போது கவனிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள்

1. சமையல் செய்யும்போது பாத்திரங்களை மூடிவைத்து சமைப்பது சத்துகள் வெளியேறுவதையும் வேறு பொருள்கள் எதுவும் கலக்காமல் பாதுகாக்கவும் உதவும்.
2. உணவு சமைக்கும் பாத்திரங்கள் நன்கு சுத்தம் செய்யப்பட்டுள்ளனவா என்பதை கவனிக்க வேண்டும்.
3. குழந்தைகள் சாப்பிடும் முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவுதல், தட்டுகள் மற்றும் குவளைகளைக் கழுவுதல், மீதமுள்ள உணவுப் பொருள்களைக் கொட்டுதல் போன்ற செயல்களைக் கண்காணிக்கத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

### இ) சத்துணவை ஆசிரியர் சுவைத்து தரத்தினை அறிதல்

1. உணவைப் பரிமாறும் முன்னர் ஆசிரியர் ஒருவர் அதனை சுவைத்துப் பார்த்து உணவின் தரத்தினை உறுதிப்படுத்திட வேண்டும்.
2. உணவுப்பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படவேண்டும்.
3. பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களும் ஆசிரியர்களுடன் சேர்ந்து சுழற்சி முறையில் உணவைச் சுவைத்து அதன் தரத்தினைப் பரிசோதிக்க வேண்டும்.

### ஈ) சமையல் அறையைச் சுத்தம் செய்தல்

1. சமைப்பதற்கு முன்னரும் பின்னரும் சமையல் அறையின் தரை, சமையல் மேடை, சுவர்கள் மற்றும் தரையின் மூலைகள், ஓரங்களைச் சுத்தம் செய்திட வேண்டும்.
2. சமைக்கும் பகுதி எப்போதும் சுத்தமாகவும் உலர்வாகவும் இருக்க வேண்டும்.
3. விரிசல்கள், கரடுமுரடான தளங்கள், பழுதான குழாய், மின் இணைப்புகள் முதலியவை உடனுக்குடன் சரிசெய்யப்பட வேண்டும்.




School Safety Module Final.indd 15 15/10/2024 13:02:12

## உ) பாத்திரங்கள், கருவிகள் மற்றும் பிற உபகரணங்களைச் சுத்தம் செய்தல்

1. மேஜைகள், நாற்காலிகள், உபகரணப் பெட்டிகள், அலமாரிகள் போன்றவை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட வேண்டும். சமையல் பாத்திரங்கள், காய்கறி வெட்டப் பயன்படும் கருவிகள் சுத்தமாக இருக்க வேண்டும்.
2. பாத்திரங்களில், சமைத்த பழைய உணவுத் துணுக்குகள் இல்லாதவாறு சலவைத் தூள் கொண்டு தேய்த்து, திறந்த குழாய் தண்ணீரில் நன்கு கழுவப்படவேண்டும்.
3. கழுவிய பாத்திரங்களைச் சுத்தமான உலர்ந்த துணிகொண்டு நன்கு துடைக்க வேண்டும்.
4. சுத்தமான துணிகளைக் கொண்டு தரைதளத்தையும் துடைத்திட வேண்டும்.
5. தரைகளைச் சுத்தம் செய்யப் பயன்படுத்திய துணிகளை மேஜைகள் மற்றும் பிற வேலை செய்யும் பகுதிகளையோ, பாத்திரங்களையோ துடைக்கப் பயன்படுத்தக் கூடாது.

## ஊ) உணவு தயாரிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் சுய தூய்மை மற்றும் சுகாதார நல வாழ்வு ஆய்வு

1. சமையலறை ஊழியர்களுக்கு வயிற்றுப் போக்கு, வாந்தி, தொற்றுக்காயங்கள், தோல் வியாதி, மஞ்சள்காமாலை அல்லது புண்கள் இருப்பின் உடனடியாக மேற்பார்வையாளரிடம் தெரியப்படுத்த வேண்டும்.
2. தூய்மையான ஆடை அணிதல், நகங்களை வெட்டி தூய்மையாக வைத்திருத்தல், அவ்வப்போது குறிப்பாக, கழிவறையைப் பயன்படுத்திய பின்னர், கெட்டுப்போன உணவுகளைக் கையாண்டபின் சோப்பு கொண்டு கைகளை நன்கு கழுவி சுத்தம் செய்தல் வேண்டும்.
3. உணவுப் பொருள்களைக் கையாளும் போது, மெல்லுதல், புகைப்பிடித்தல், எச்சில் உமிழ்தல், மூக்கு சிந்துதல் போன்ற செயல்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
4. சமையலறையில் பணிபுரிபவர்கள் சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையலறையைச் சுத்தம் செய்யும்போதும், பாத்திரங்கள் கழுவும்போதும், காய்கறிகள் நறுக்கும்போதும், சமைக்கும்போதும், உணவு பரிமாறும்போதும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ பள்ளி வளாகத்திற்குள் நுழைந்தவுடன் சத்துணவு சமையல் செய்பவர் அல்லது உதவியாளர் தனது கைகளைக் குறைந்தபட்சம் 40 வினாடிகளாவது சோப்புப் போட்டு கழுவவேண்டும் அல்லது கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

## எ. பூச்சியைக் கட்டுப்படுத்துதல் (Pest Control):

1. எலி, அணில், பன்றி, பறவைகள், பல்லி மற்றும் பூச்சியினங்கள் ஆகியவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க சமையல் அறையைச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம்.



2. சன்னல், கதவுகளில் வலை அமைப்பு திரைச்சீலைகள் பயன்படுத்துவதால் மேற்கூறிய தீங்கு செய்யும் உயிரினங்கள் உள் நுழைவதைத் தடுக்கலாம்.
3. துளைகள், கழிவுநீர் வடிபாதை போன்றவைகள் மூடிய நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அதன்வழியே பூச்சிகள், கொசுக்கள் முதலியன நுழைய வாய்ப்பு உள்ளது. ஆதலால், அவற்றைக் கவனமுடன் பராமரித்தல் வேண்டும்.



School Safety Module Final.indd 16 15/10/2024 13:02:12

4. ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் பள்ளிப் பராமரிப்பு மானியங்களைப் பயன்படுத்தி இவற்றைச் சரி செய்து கொள்ளலாம்.

5. பள்ளியில் சமையலறை உள்ள பகுதிகளில் தீப்பிடிப்பதைத் தவிர்க்கும் வகையில் தீயணைப்புக் கருவிகள் மற்றும் போதுமான பிற வசதிகள் செய்யப்படவேண்டும்.

## 3.7 பரிந்துரைக்கப்பட்ட போதைப் பொருள் தடுப்பு திட்டம்:

1. பள்ளி அளவில் புகையிலை, மது மற்றும் போதைப்பொருள்களின் தீங்கு குறித்தும் அவற்றிலிருந்து தற்காத்துக் கொள்ளப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்வுகளை மேற்கொள்ளலாம்.

2. பள்ளிகளில் இத்தகைய விழிப்புணர்வுத் தகவல்கள் நிறைந்த புத்தகங்கள் அல்லது குறுந்தகடுகள் வாங்குதல், பணிமனைகள் நடத்துதல். பாடங்களுடன் இணைத்துக் கற்பித்தல் குடும்ப ஆலோசனை மற்றும் உடல், மனசிகிச்சைகள், ஆலோசனைகளை வழங்கலாம்.

3. பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதன்மூலம் மாணவர்களின் உடல், மனநலப் பாதுகாப்பை மேம்படுத்தலாம்.





School Safety Module Final.indd 17 15/10/2024 13:02:12

பிரிவு
4

# உளவியல் மற்றும் சமூக நோக்கங்கள்

## 4.0 முன்னுரை

பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வண்ணம், பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். பள்ளிகளில் ஏற்படும் வன்முறைகள், பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் குழந்தைகளின் உடல்நலத்தைப் பாதிப்பதோடு மனதளவிலும் பாதிப்பை உண்டாக்குகிறது.

பள்ளியில் மாணவர்களின் ஆளுமைத்தன்மையை வளர்க்கும் விதமான சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகளையும் அமைத்துத் தரவேண்டும். பயமில்லாத சூழலே படைப்பாற்றலை வளர்க்கும். அதனால் உடல்ரீதியான தண்டனைகளை மாணவர்களுக்கு அளிக்கக்கூடாது என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

## 4.1 உடல்ரீதியான தண்டனை

உடல்ரீதியான தண்டனை மனதளவில் பாதிப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையலாம் என RTE சட்டம்–2009 வரையறுத்துள்ளது. பாலியல் துன்புறுத்தலிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்–2012 இன்படி, அனைத்து உடல்ரீதியான தண்டனைகளும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்குள் அடங்கும்.

உடல்ரீதியான தண்டனை என்பது கை அல்லது பிரம்பு போன்ற குச்சிகளால் வலி உண்டாக்குவது, காயங்கள் ஏற்படுத்துவது, சாதகமற்ற சூழ்நிலையை உண்டாக்குவது ஆகும். இருக்கைகளில் ஏறி நிற்கச் செய்வது, கைகளால் காதுகளைப் பிடிக்கச் செய்தல், வகுப்பறை, நூலகத்தை விட்டு வெளியே நிற்கச் செய்வது போன்றவை உடல்ரீதியான தண்டனைகளுக்குள் அடங்கும்.

## 4.2 மனரீதியான தண்டனை

மனரீதியான துன்புறுத்தல் என்பது உடல் துன்புறுத்தல் அல்ல. மாறாக குழந்தைகளின் உளவியல் நலத்தைப் பாதிக்கிறது. கேலிப்பேச்சு, தரக்குறைவான / இழிவான சொற்களைப் பயன்படுத்துதல், பட்டப்பெயர்களில் அழைத்தல், அவமானப்படுத்தும் விதமாக பெயரடைகளைப் பயன்படுத்தி அழைப்பது, திட்டுவது, குழந்தைகள் பற்றிய தவறான கருத்துகள் மற்றும் அவர்களின் கல்வித்தரம் குறைவதை வைத்துப் பேசுவது அவர்களின் குடும்பப்பின்னணி, பொருளாதாரம், பெற்றோர்களின் நிலை பற்றி வகுப்பறைகளில் பேசி மனரீதியான பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியரைக் கையாளும்போது மிகுந்த கவனமும், அக்கறையும் தேவை. எவ்வளவு மோசமாக குழந்தை நடந்துகொண்டாலும் உடல் / உளவியல்ரீதியான தண்டனைகளை வழங்கக்கூடாது. பொதுவாக அனைத்து மாணவர்களையும் நல்ல செயல்களுக்கும் / நடத்தைகளுக்கும் ஊக்குவிக்க வேண்டும் (Motivation). மேலும், இதற்கு நேர்மறை வலுவூட்டும் முறைகளைப் (Positive reinforcement) பின்பற்ற வேண்டும். இது மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு



School Safety Module Final.indd 18 15/10/2024 13:02:12

மட்டுமின்றி அனைத்து மாணவர்களுக்கும் பொருந்தும்.

## பள்ளியில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்

1. ஒவ்வொரு பள்ளியிலும் துன்புறுத்துதல் எதிர்ப்புக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இக்குழுவில் பள்ளி உதவித் தலைமை ஆசிரியர், மூத்த ஆசிரியர், பள்ளி மருத்துவர், பெற்றோர்–ஆசிரியர் கழக உறுப்பினர், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர், சட்டவல்லுநர், சக கல்வியாளர்கள் போன்றவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும். அக்குழு கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

   அ) பள்ளியில் துன்புறுத்துதல் தடுப்புத்திட்டத்தைச் செயல்படுத்தும் வழிமுறைகளை வகுத்தல்.

   ஆ) துன்புறுத்துதல் தடுப்பு நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்ளல்.

   இ) ஆசிரியர், மாணவர், பெற்றோருக்கு பயிற்சி முகாம்கள் நடத்துதல்.

   ஈ) பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் விழிப்புணர்வு உண்டாக்குதல்.

   உ) துன்புறுத்துதல் நிகழ்வுகளைப் பார்க்கும்போது விழிப்புடன் செயல்பட்டு உடனடியாகத் தகவல் அளித்தல்.

   ஊ) குழு உறுப்பினர்களின் தொலைபேசி எண்கள் பள்ளியின் வெவ்வேறு இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

2. நோய்த்தொற்றுப் பரவல் குறித்த அனைத்துப் பாதுகாப்பு வழிமுறைகளையும் மாணவர்களுக்குக் கற்றுத்தர வேண்டும். இதனை வலியுறுத்த பாதுகாப்பு வழிமுறைகள், படங்கள் கொண்ட சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டப்பட வேண்டும். கைகளைக் கழுவுவதற்கு தேவையான இடங்கள் (stalls / booths), பொருள்கள், சாதனங்கள் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட வேண்டும்.

3. நோய்த்தொற்றுப் பரவல் தொடர்பான உடல்ரீதியான பிரச்சனைகள் மட்டுமின்றி உளவியல்ரீதியான பயம், கவலை, அதிகமாக கை கழுவுதல் போன்ற செயல்களையும் கண்காணித்து, தேவையெனில் மனநல மருத்துவர் / நிபுணரிடம் அனுப்பவேண்டும்.

4. குழந்தைகள் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் தங்கள் பிரச்சனைகளை வெளிப்படுத்தும் இடமாக பள்ளி அமைய வேண்டும். பள்ளிகளில் புகார் பெட்டி அல்லது ஆலோசனைப் பெட்டி (Complaint / Suggestion Box) வைக்க வேண்டும்.

5. குழந்தைகள் ஆரோக்கியமாக வளர சாதகமான சுற்றுச்சூழலும், சிறப்பான கற்றல்–கற்பித்தல் சூழலும் அவசியம். அனைத்து வகுப்பறைகளும், பள்ளி வளாகமும் தூய்மையாக இருக்க வேண்டும். மாணவர்கள் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களும் தினமும், அவ்வப்போது தேவைக்கேற்றாற்போல் சுத்தம் செய்யப்பட வேண்டும். உதாரணத்திற்கு அவர்களுடைய பை, மேஜை, விளையாட்டுப் பொருள்கள், சிறப்பு வகுப்பறைகளில் உள்ள பயிற்சிக்குத் தேவையான பொருள்கள், திறன்மிகு (SMART) வகுப்பில் உள்ள திரை, ரிமோட் போன்ற அனைத்துப் பொருள்களும் உள்ளடங்கும்.

   பள்ளியில் மூடப்பட்ட அறைகள் இருத்தல், கூட்டம் கூடும் இடங்களில் மாணவர்கள் நெருக்கமாக அமர்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

6. சுவரொட்டிகள் / செய்திகளைக் கொண்ட ஒட்டுப்படங்கள் / சூழல் வரைபடச் செய்திகளைப் பொருத்தமான இடங்களில் அனைவரும் பார்க்கும்படி காட்சிப்படுத்துதல் வேண்டும். இந்த அறிவிப்புகள் உடல்/சமூக இடைவெளியை வலியுறுத்துவதற்காக வகுப்பறைகள், அலுவலகங்கள், கழிவறைகளுக்கு வெளியே, கைகளைக் கழுவுமிடங்கள், தண்ணீர் குடிக்கும்



School Safety Module Final.indd 19 15/10/2024 13:02:12

இடங்கள், பள்ளிச் சமையலறை, கலை அரங்குகள், பேருந்துகள் / வாடகை வாகனங்கள் நிறுத்துமிடங்கள், பள்ளிக்கு உள்ளே வரும் வாசல், வெளியே செல்லும் வாசல் போன்ற இடங்களில் நினைவூட்டுவதற்காகவே வைக்கப்பட வேண்டும்.

## 4.3 துன்புறுத்துதல் (Abuse)

உலக சுகாதார அமைப்பு (World Health Organization) குழந்தைத் துன்புறுத்தலை (Child Abuse) பின்வருமாறு வரையறுக்கின்றது "குழந்தையின் உடல் அல்லது உணர்வுகளைப் பாதிக்கும் வண்ணம் துன்பப்படுத்துதல், பாலியல் வன்கொடுமை, கவனக்குறைவான மருத்துவ சிகிச்சை, வர்த்தகச் சுரண்டல் ஆகியவையாகும். இது குழந்தையின் நலவாழ்வு, உயிர், கண்ணியம், வளர்ச்சி, உறவுமுறை, பொறுப்பு, நம்பிக்கை போன்றவற்றைப் பாதிக்கின்றது. "மேலும், குழந்தை துன்புறுத்தல் கீழ்க்காண்பவற்றை உள்ளடக்கியது.

1. உடல் துன்புறுத்தல் / வன்கொடுமை (Physical Abuse / Violence)
2. மனரீதியான துன்புறுத்தல் (Emotional Abuse)
3. புறக்கணிப்பு (Neglect)
4. பாலியல் துன்புறுத்தல் (Sexual Abuse)

### குழந்தைத் துன்புறுத்தலைக் கண்டறிதல்

பள்ளியில் குழந்தையின் நடத்தை, அவர்கள் உடலில் காணப்படும் காயங்கள், பெற்றோரோடு பேசும்போது பெறப்படும் விவரங்கள் போன்றவை மூலம் குழந்தை துன்புறுத்தலைக் கண்டறியலாம்.

1. **உடல் துன்புறுத்தல்/ வன்கொடுமை (Physical Abuse / Violence)**

உடல் துன்புறுத்தல் என்பது குழந்தைகளின் உடலில் ஏற்படும் தற்செயலான உடற்காயங்கள், தீக்காயங்கள், அடித்தல், உதைத்தல், குத்துதல் போன்றவற்றின் மூலம் ஏற்படும் காயங்களை உள்ளடக்கியது.

உடல் ஊனமுற்ற / மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மீதான துன்புறுத்தல் நம்மால்



அதிகம் கண்டுபிடிக்கப்படுவதில்லை. அதீத சுறுசுறுப்புடன் இருக்கும் குழந்தைகளிடம் காணப்படும் துன்புறுத்தலின் அறிகுறிகளை எளிதாகக் கண்டுபிடிக்கலாம்.

**2. மனரீதியாகத் துன்புறுத்தல்**

வீட்டில், பள்ளியில் அல்லது சமூகத்தில் குழந்தைகள் மனரீதியாகத் துன்புறுத்தப் படுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். மனரீதியான துன்புறுத்தல் என்பது ஒரு குழந்தையை அவமானப்படுத்துவது, தொடர்ந்து விமர்சிப்பது, அச்சுறுத்துவது, கூச்சலிடுவது, குழந்தையை நகைச்சுவைப் பொருளாக மாற்றுவது, குழந்தையைக் காயப்படுத்திக் கிண்டல் செய்வது, குற்றம் சாட்டுவது, குழந்தையின் தனித்துவத்தை அங்கீகரிக்காமல் அவர்களின் புறத்தோற்றங்களை வைத்து கேலி செய்வதன் மூலம் கண்டறியலாம்.





School Safety Module Final.indd 20 15/10/2024 13:02:13

3. புறக்கணிப்பு (Neglect)

வீட்டில், பள்ளியில், சமூகத்தில் குழந்தையின் அடிப்படை உரிமைகள், தேவைகள் மறுக்கப்படுகின்றனவா எனத் தெரிந்து கொள்ள வேண்டும். உதவிகோரும் குழந்தையை உதாசீனப்படுத்துவதோ, அலட்சியப்படுத்துவதோ கூடாது. அக்குழந்தைக்குத் தேவையான உதவி (அ) நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதனைப் பள்ளி நிருவாகம் தொடர்ந்து கண்காணித்து குழந்தைக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தரவேண்டும்.



4. குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் (Sexual Abuse)

content 3

பாலியல் துன்புறுத்தல் என்பது குழந்தையைப் பாலியல் உறவில் வற்புறுத்தலைக் குறிப்பதாகும். குழந்தையின் மறைவான உடல் பாகத்தைத் தொடுதல், குழந்தையைப் பிறரின் மறைவான உடல் பாகங்களைத் தொடச் செய்தல், பாலுறவு, வன்புணர்வு, பாலியல் வன்கொடுமை, ஆபாசமான நிகழ்வுகளைக் காண்பித்தல் போன்றவற்றின் மூலம் குழந்தையிடம் பாலியல் துன்புறுத்தல் மேற்கொள்ளப்படுகிறதா என்பது கண்டறியப்பட வேண்டும்.



## 4.4 POCSO சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

content 4

உடல், மன, சமூகரீதியான வளர்ச்சியை குழந்தைகள் இடையே உருவாக்க இந்திய அரசாங்கம் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டத்தை (POCSO Act 2012) 2012–இல் இயற்றியுள்ளது. இதன் நோக்கம் குழந்தைகளைப் பாலியல் துன்புறுத்தலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்பதாகும். இச்சட்டம் நவம்பர் 14, 2012 – இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.




1. இச்சட்டத்தின் பிரிவு 5, 6, 9, 10 இன் படி பாலியல் குற்றத்தில் ஈடுபடுவோர் அபராதம் செலுத்த வேண்டும்.
2. சட்டப்பிரிவு 19 (11) மற்றும் 21 (2) இன் படி, பாலியல் குற்றத்தில் ஈடுபடுவோர் கல்வி நிறுவனங்களில் வேலை செய்தால், அக்குற்றங்கள் அவர் மேல் நிரூபிக்கப்பட்டால் அதிகத் தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டும். ஆசிரியர்கள், கல்வியாளர்கள் இதனைக் கண்டறிந்து இதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அவர்களும் அபராதம் செலுத்த வேண்டும்.

## 4.5 POCSO சட்டம் குறிப்பிடும் குழந்தையைப் பாதிக்கின்ற காரணிகள்

1. குழந்தையின் தோற்றத்தைக் குறித்து ஆபாசக் கருத்துகள் கூறுதல்.



School Safety Module Final.indd 21 15/10/2024 13:02:13

2. கட்டாயமாக உடல் உறுப்புகளைத் தொடுதல், உடலைத் தவறான நோக்கில் உற்றுநோக்குதல்.
3. பாலியல் சார்ந்த முறையற்ற தகவல்களை உள்ளடக்கிய கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்தி (SMS), மின்னஞ்சல் போன்றவற்றைக் குழந்தைகளுக்கு அனுப்புதல்.
4. குழந்தைக்கு சங்கடம் ஏற்படுத்தும் ஆபாச நகைச்சுவைகளைக் கூறுதல், அவமதிக்கும் பெயர்கள் வைத்து அழைத்தல்.
5. பாலியல் அடிப்படையிலான அவமானங்கள் ஏற்படுத்துதல்.
6. குழந்தையின் உடல் பாகங்களைத் தகாத முறையில் தொடுதல், கிள்ளுதல்.
7. வயது வந்தவர் மற்றும் குழந்தையின் முன் சுயஇன்பம் (Masturbation) மேற்கொள்ளல்.
8. குற்றம் புரிவோர் தங்கள் மறைவான உடல் பாகங்களைக் குழந்தையிடம் காண்பித்தல்.
9. குழந்தையை ஆபாசச் செயல்களில் ஈடுபடுத்துதல்.
10. குழந்தை விரும்பாத ஆபாசப் படங்களை குழந்தையிடம் காண்பித்தல்.
11. பாலுறவு பற்றிய செய்திகளைக் குழந்தை கேட்கும்படியாகவோ அல்லது பார்க்கும்படியாகவோ வைத்தல்.
12. குழந்தைத் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்துதல்.
13. விரும்பத்தகாத பாலியல் தொந்தரவுகள் அளித்தல்.
14. பெண்களைக் கேலி செய்தல்.
15. ஆபாசமான அல்லது கேவலமான படங்கள், கேலிப்படங்கள், துண்டுப் பிரச்சாரங்கள் காண்பித்தல் அல்லது பழமொழிகள் சொல்லுதல்.
15. உடல்ரீதியான அல்லது மனரீதியான பாலியல் தொந்தரவுகள் அளித்தல்.

மேற்கூறிய கருத்துகள் குழந்தையைப் பாதிக்கின்ற காரணங்களாக இருக்கின்றன.

### 4.5.1 குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல் சார்ந்த ஊழியர்கள் தொடர்பான கொள்கை

1. ஊழியர்கள் குழந்தையின் தனிப்பட்ட வாழ்வு மற்றும் கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு குழந்தைக்கு எவ்வித பாலியல் தொந்தரவுகளும் கொடுக்கக்கூடாது.
2. குழந்தைகளின் பாலியல் புகார்களை விசாரிக்க குறைதீர்க்கும் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அக்குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு.

- ❖ கல்வியாண்டின் முதல் மாதத்திற்குள் குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலில் (CSA) இருந்து பாதுகாக்க ஒரு குழு அமைத்திட வேண்டும்.
- ❖ அந்தக் குழு 25% மாணவர்கள், 50% நிருவாகத்தினர், 25% SMC உறுப்பினர்கள் அல்லது PTA உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேலும், அக்குழுவின் உறுப்பினர்கள் 50% பெண்களாக இருக்க வேண்டும்.
- ❖ ஒவ்வொரு மாதமும் CSA குழுவின் கூட்டம் நடைபெற வேண்டும். அதன் நடவடிக்கைகள் பதிவேட்டில் பதிவிடப்பட வேண்டும்.
- ❖ இக்குழுவின் முக்கிய வேலை பள்ளிகளில் பாலியல் துன்புறுத்தலைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது, பாதுகாப்பான தொடுதல் – பாதுகாப்பற்ற தொடுதலுக்கு இடையேயான வேறுபாட்டை உணர்த்துதல். புகார் பெட்டியில் ஏதும் புகார் இருப்பின் அதை மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்.
- ❖ மாணவர்கள் தாங்கள் மதிக்கும் ஒரு நபரிடம் தங்களுக்கு ஏதேனும் பாலியல் தொந்தரவுகள் நிகழுவதாக உணர்ந்தால் பயமின்றி வெளிப்படுத்த மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ குழந்தை கூறும் விபரங்களை அனைவருக்கும் தெரிவிக்கக்கூடாது. அதனை சம்பந்தபட்ட குழு உறுப்பினர்,


School Safety Module Final.indd 22 15/10/2024 13:02:13

அலுவலருக்குத் தெரிவிக்கவேண்டும் பிரச்சனையைத் தீர்க்க அக்குழு உடனடியாக செயல்பட வேண்டும்.

❖ பாலியல் தொல்லைக்கு ஆளான குழந்தையைப் பக்குவமாக, தொடர்ந்து கண்காணித்து இயல்பு நிலைக்குத் திரும்பத் தேவையான முயற்சி, உதவி, ஆதரவு அளிக்கவேண்டும்.

3. விவரங்களைக் குழந்தை கூற மறுத்தால் மேலும் கேள்விகேட்காமல் குழுவில் சம்பந்தபட்டவரிடம் (அ) அலுவலரிடம் தெரிவிக்கவேண்டும். குழந்தை விவரத்தைக் கூற மறுத்தாலோ (அ) தயங்கினாலோ, ஏதும் நடக்கவில்லை என்று கருதி புறக்கணிக்கக்கூடாது.
4. பாலியல் துன்புறுத்தல் சார்ந்து குழந்தை அளித்த அனைத்து விவரங்களும் இரகசியமாக (Confidentiality) இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தவிர (ஆசிரியர், குழு உறுப்பினர், தொடர்பு அலுவலர், பிறர்) மற்ற ஆசிரியர்களுக்கோ, ஊழியர்களுக்கோ, மாணவர்களுக்கோ, பிற பெற்றோருக்கோ தெரிவிக்கக்கூடாது. மிகுந்த கவனத்துடன் விவரங்களைக் கையாளவேண்டும்.
5. ஆசிரியர்களும் / ஊழியர்களும் ஏதேனும் பாலியல் குற்றங்கள் நடந்தால் விழிப்புணர்வுடன் செயல்பட்டு உடனடியாக அலுவலர்களுக்கும் காவல் துறையினருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.
6. பள்ளியில் இருந்து குழந்தைகள் வெளியே களப்பயணம் செல்லும்போது துணையாக பள்ளி ஊழியர்கள் செல்ல வேண்டும். மாணவிகள் அந்தக் குழுவில் இருந்தால் பெண் ஆசிரியர்கள் அவர்களுடன் அதே வாகனங்களில் பயணம் செய்ய வேண்டும்.

### 4.5.2. வழிகாட்டு நெறிமுறைகள்

1. விசாரணை நடக்கும் போது குழந்தையிடம் புகாருக்கு உட்பட்ட நபர் தொடர்பு கொள்ளக்கூடாது.
2. குழந்தையின் முன்னிலையில் குற்றம் புரிந்தவரிடம் பேசக் கூடாது.
3. குழந்தையின் மீது குற்றம் சுமத்தக் கூடாது. குழந்தையை நம்புங்கள். அவளோ / அவனோ நன்றாக, பாதுகாப்பாக உள்ளனர் என்பதைப் புரிய வையுங்கள். குழந்தைக்கு ஆதரவும் நம்பிக்கையும் கொடுங்கள்.
4. குழந்தை தனக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்தல் குறித்த அனுபவங்களைச் சொல்லும் போது பொறுமையோடும் அமைதியாகவும் கேளுங்கள். குறுக்கீடு செய்து நிறைய கேள்விகள் கேட்க வேண்டாம்.
5. குழந்தையின் தனிப்பட்ட உரிமையை மதியுங்கள். குழந்தை வெளிப்படுத்திய இரகசியங்களை மற்றவரிடம் சொல்ல வேண்டாம். மற்றவர்கள் அக்குழந்தையிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டாம்.
6. குற்றம் நடந்த சம்பவம் குறித்து வெளிப்படுத்தாமல் அனைத்து மாணவர்களுக்கும் தனிப்பட்ட பாதுகாப்பைக் குறித்த அறிவுரைகள் வழங்க வேண்டும்.
7. POCSO சட்டம் 2012 இன் படி, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான அக்குழந்தையின் அடையாளம் மற்றும் கொடுத்த வாக்குமூலத்தின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்.

### 4.5.3. குழந்தைத் திருமணம் (Child Marriage)

குழந்தைத் திருமணம் என்பது 18 வயது நிறைவடையாத ஒரு பெண் அல்லது ஆணின் திருமணம் என்று வரையறுக்கப்படுகிறது. குழந்தைத் திருமணம் சிறுவர் மற்றும் சிறுமியர்கள் இருபாலினத்தவரையும் பாதிக்கிறது என ஐக்கியநாடுகளின் சிறுவர் நிதியகம் (UNICEF) தெரிவித்துள்ளது.






School Safety Module Final.indd 23 15/10/2024 13:02:13

நம் நாட்டில் முதன் முதலில் 1929 இல் குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது. சமீபத்தில் 2006 இல் குழந்தைத் திருமணத் தடுப்புச்சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் 21 வயது நிறைவடையாத ஒரு ஆணும் 18 வயது நிறைவடையாத ஒரு பெண்ணும் குழந்தைகளாகவே கருதப்படுவர். இந்த வயது வரம்புக்குக்கீழே நடைபெறும் திருமணங்களை இந்தச் சட்டம் தடை செய்கிறது. சிறு வயதில் நிச்சயதார்த்தத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆணோ அல்லது பெண்ணோ அத்திருமணத்தை இரத்து செய்யலாம் அல்லது செல்லாதது என்றும் கூறலாம்.

content 5

குழந்தைத் திருமணத்தை நடத்தி வைப்பவர், அனுமதிப்பவர், ஆதரிப்பவர் என யாராக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையோ அல்லது ஒரு இலட்சம் ரூபாய் அபராதமோ அல்லது இவ்விரண்டையும் சேர்த்தோ விதிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்துள்ளது. இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக தமிழக அரசு இந்தச் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சமூக நல அலுவலர்கள் குழந்தைத் திருமணத் தடை அலுவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

### குழந்தைத் திருமணத்திற்கு எதிரான நடவடிக்கை:

❖ முதலில் குழந்தைகளுக்கான உதவி தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும் அல்லது காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**உதவி எண்கள்**
குழந்தைத் திருமணத்தைத் தடுக்க தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள உதவி எண் 1098 ஆகும்.

❖ குழந்தைகளுக்கான உதவி தொலைபேசி தொடர்பின் மூலம் அவர்களுக்கான ஆலோசனை, சட்ட உதவி ஆகியவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

❖ குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் குழந்தைத் திருமணத்தடுப்பு அலுவலரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

❖ பொம்மலாட்டம், தெருக்கூத்து, நாடகங்கள், பேரணிகள், கருத்தரங்குகள் மூலமாக குழந்தைத் திருமணத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும்.

### 4.5.4. இணைய பாதுகாப்பு (Cyber Safety)

இணைய பாதுகாப்பு என்பது (Cyber safety) தொழில்நுட்பம் சார்ந்தது மட்டுமல்ல. இணையதளம் பயன்படுத்தும் நமக்கும் அதில் தொடர்பு இருக்கிறது. நம்முடைய தினசரி வாழ்க்கையை எளிமையாக்க அனைத்து வகையான நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நமக்கு அவற்றைக் குறித்த சரியான புரிதலும் விழிப்புணர்வும் தேவை.



இணையவெளியில் இயங்குகின்ற கணினிகள், வலையமைப்புகள், மென்நிரல்கள், தரவுகள் திரட்டுதல் போன்றவற்றை சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாப்பதே இணைய பாதுகாப்பு எனப்படும்.

### இணையக் குற்றங்கள் (Cyber Crimes)

❖ ஸ்பாம் (spam) எனப்படும் தேவையில்லாத அச்சுறுத்தும் மின்னஞ்சல் செய்திஅனுப்புதல்.

❖ இணையத்தில் பணப்பரிமாற்றங்கள் நடக்கும்போது, கடவுச்சொல் போன்ற விவரங்களைத் திருடுதல்.

❖ கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களில் இருந்து தகவல்களைத் திருடுதல்.



School Safety Module Final.indd 24 15/10/2024 13:02:13

❖ வேறு ஒருவருடைய தகவல்களைப் பயன்படுத்தி இணையத்தில் உலவுதல்.

❖ பிறரது வலைதளங்களைத் திருடி, தடை செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கு பயன்படுத்துதல்.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்




❖ இணையதளத்தில் ஒருவரின் தனிப்பட்ட முழு விவரங்களையும் கொடுக்க வேண்டாம். முக்கியமாக சமூக வலைதளங்களில் பதியக் கூடாது.

❖ புகைப்படங்கள் பகிர்வதைத் தடுக்கலாம். தற்போது உள்ள தொழில்நுட்பங்கள் மூலம் அந்தப் புகைப்படங்களை எளிதாக மாற்ற முடியும்.

❖ கடவுச்சொல்லை (Password) யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

❖ உங்கள் தனிப்பட்ட தகவல்களான வயது, முகவரி, தொலைபேசி எண், பள்ளி விவரம் போன்ற தகவல்களைப் பதிவிடுதல் அடையாள திருட்டுக்கு வழிவகுக்கும்.

❖ சமூக வலைதளங்களில் உங்கள் தனியுரிமை அமைப்புகளை (Privacy settings) மிகவும் கவனமாக மேற்கொள்ளுங்கள்.

❖ இணைய தளங்களில் உங்கள் நண்பர்களின் தகவல்களை வெளியிட வேண்டாம்.

❖ இணைய தளங்களில் நீங்கள் படித்த எதையும் (நம்பகமான மூலத்திலிருந்து) சரிபார்க்காமல் சமூக ஊடகங்களில் அனுப்ப வேண்டாம்.

❖ சமூக வலைதளங்களில் உள்நுழைந்த பிறகு உங்கள் கணக்கில் இருந்து வெளியேறுவதை உறுதி செய்ய வேண்டும்.

**உதவி எண்கள்**
இணையப் பாதுகாப்பு
2 : 155260 (9 a.m – 6 p.m)

### 4.5.5. பள்ளிகளில் ஆலோசனை

பள்ளிக் கல்வித்துறை பள்ளிகளில் உகந்த சூழ்நிலையை உருவாக்க அறிவுறுத்தியுள்ளது. பயம், பதற்றம், மன அழுத்தம் போன்றவை நீங்கி மாணவர்கள் மகிழ்ச்சியான மனநிலையோடு படிக்க வேண்டும். மேலும், மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதைக் குறித்தும் பரிந்துரைத்துள்ளது.

**இலவசத் தொலைபேசி**
**சேவை எண் 14417**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் வாயிலாக, தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பயன்பெறும் வகையில் 14417 இலவசத் தொலைபேசி சேவை வழங்கப்பட்டுள்ளது.

இத்தொலைபேசி எண் கீழ்க்காணும் சேவைகளை இலவசமாக வழங்கி வருகின்றது.

1. அரசின் நலத்திட்டங்களை அனைவரும் அறிந்து கொள்ளல்.
2. பாடத்திட்டம், தேர்வு முறைகள் மற்றும் மேற்படிப்பு சார்ந்த விவரங்களை வழங்குதல்
3. மலைவாழ் மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு மேற்படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த அறிவுரை வழங்குதல்
4. வளரிளம் பருவ மாணவர்களுக்கான மனநிலை சார்ந்த அறிவுரை வழங்குதல்.
5. மாநில மற்றும் தேசிய அளவிலான பல்வகைப் போட்டிகளில் பங்கேற்கும் வழிமுறைகளைத் தெரிவித்தல்.
6. சத்தான உணவு மற்றும் உடல் நலம் சார்ந்த விவரங்களை வழங்குதல்.
7. தேர்வுக்காகத் தயார்படுத்துதல், தேர்வை எதிர்கொள்வது மற்றும் தேர்வு முடிவுகள் பற்றிய பயத்தைப் போக்குதல்.
8. கல்விசார்ந்து வேறு எவ்வகையான ஐயப்பாடுகளோ/குழப்பங்களோ இருந்தால் தெளிவுபடுத்துதல்.




School Safety Module Final.indd 25 15/10/2024 13:02:13

பிரிவு 5

# குழந்தைகள் பாதுகாப்பில் பல்வேறு தரப்பினரின் கடமைகளும் பொறுப்புகளும்

பள்ளிக் குழந்தைகள் பாதுகாப்பில் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் பள்ளி சார்ந்த அலுவலர்கள் அனைவருக்குமே பங்கு உள்ளது. ஆசிரியர்கள் உள்ளிட்ட பள்ளி அலுவலர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளைக் கண்டறிவதிலும், அவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதிலும், பிரச்சனைகள் வராத வண்ணம் தடுப்பதிலும் முனைப்புடன் செயல்படும் பொறுப்பு உள்ளது. பள்ளிப் பாதுகாப்பு என்ற பரந்த அமைப்பால் பள்ளியும், பள்ளிசார் அலுவலர்களும், சமூகநலத்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை மற்றும் அது சார்ந்த துறைகளோடு இணங்கி மாணவர்களின் நலவாழ்வையும், அவர்களைத் தீங்கிலிருந்து பாதுகாப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

## 5.1 பள்ளி ஆசிரியர்களின் பங்கு (The Role Of School Teachers)

1. தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் தங்கள் பணியின் முக்கியக் கடமையாக குழந்தைகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும். மேலும், குழந்தைகளுக்குப் பாதுகாப்பான கற்கும் சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்பும் அவர்களுக்கு உள்ளது.

**ஆசிரியர்களின் பங்கு:**

i மாணவிகளுடன் பெண் ஆசிரியர்கள் அடிக்கடி கலந்துரையாட வேண்டும். அவர்களிடம் ஏதேனும் சிக்கல்களோ நடத்தை மாற்றங்களோ ஏற்பட்டால் உடனடியாக உரிய நபரிடம் தெரியப்படுத்த வேண்டும்.



ii. மாணவர்களிடம் தங்களின் நம்பிக்கைக்கு உரியவர்களிடம் இருந்தோ, பாதுகாப்பானவர்களிடம் இருந்தோ பாலியல் ரீதியான தொல்லைகள் ஏற்படுகிறது என்ற புரிதலோ அச்சமோ இருந்தால் அதனைக் களைவதற்கு உடனடியாக ஆசிரியர்களிடம் தெரியப்படுத்த அறிவுரைகள் கூறி ஊக்கப்படுத்த வேண்டும்.

iii. அனைத்து ஆசிரியர்களும் பிற ஊழியர்களும் மாணவர்களிடையே காணப்படும் பாலியல் ரீதியான தொல்லைகள் குறித்த அறிதலோ அச்சமோ இருப்பதை விழிப்புடன் உற்றுநோக்கி உரிய அதிகாரிகளுக்கு மிக விரைவாகத் தெரியப்படுத்தவேண்டும்.

iv. கல்விச் சுற்றுலாவின் போது ஆசிரியர்கள் அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாவலர்களாகச் செல்லவேண்டும். அக்குழுவில் பெண் குழந்தைகள் இருக்க நேரிட்டால் ஒரு பெண் ஆசிரியர் கண்டிப்பாக அக்குழுவுடன் செல்லவேண்டும். பாதுகாவலர்களாகச்



School Safety Module Final.indd 26 15/10/2024 13:02:13

செல்பவர் அதே வாகனத்தில் உடன் பயணிக்க வேண்டும்.

v. பல்வேறு நிகழ்வுகளில் குழந்தைகள் தாங்கள் துன்புறுத்தப்படுவதை உடனே கூறாமல் நீண்ட நாள்களுக்குப் பிறகே தங்கள் அனுபவங்களை வெளிப்படுத்துகிறார்கள். சில நிகழ்வுகளில் அவர்கள் எதிர்பாராத விதமாகவும் வெளிப்படுத்துகிறார்கள். பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் குழந்தைகள் எளிதில் ஆபத்துக்கு ஆளாக நேரிடும். அவர்கள் சில நாள்களுக்குப் பிறகு அசாதாரணமான நடவடிக்கைகள் மூலம் தங்களை வெளிப்படுத்த நேரிடும். பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் குழந்தைகளின் அறிகுறிகளை குழந்தைகளின் பாதுகாவலராக இருக்கும் ஆசிரியர் கண்டறியத் தேவையான தகவல்களை அறிந்திருக்க வேண்டும்.

5. MoE இன் அறிவுறுத்தலின்படி, பள்ளிகளில் வதை செய்தல் (Ragging) மற்றும் வார்த்தைகளால் கொடுமைப்படுத்துதல் (Bullyism), துன்புறுத்துதல் (Harrassment) இணையவழி கொடுமைப்படுத்துதல் (Cyber Bullying) போன்ற விரும்பத்தகாத நிலையைத் தடுப்பது அவசியம். இதில் பள்ளியின் நலனில் அக்கறை கொண்டோரான நிறுவனத்தின் தலைமை ஆசிரியரோ, ஆசிரியரோ கற்றலில் ஈடுபடாத ஊழியரோ, மாணவர்களோ, பெற்றோர்களோ அல்லது உள்ளூர்வாசிகளோ தனிப்பட்டோ அல்லது இணைந்தோ ஈடுபடுவார்கள். பள்ளிகளில் கொடுமைப்படுத்துதலைத் தவிர்க்க மாணவர்களின் செயல்களில் முறையான கவனம் கொள்வது அவசியம்.

அ) பள்ளியில் உதவித் தலைமை ஆசிரியர், மூத்த ஆசிரியர், பள்ளியின் மருத்துவர், ஆலோசகர் (Counsellor), பெற்றோர்–ஆசிரியர் கழக (PTA) உறுப்பினர்கள், பள்ளி நிருவாகத்தின் பிரதிநிதி, சட்ட ஆலோசகர், ஆசிரியர்கள் (Peer Educators,etc..) போன்றோரை உள்ளடக்கிய கொடுமைப்படுத்துதலுக்கு எதிரான (Anti Bullying Committee) ஒரு குழுவை ஏற்படுத்துதல் வேண்டும். அவர்களின் பங்குகள் மற்றும் கடமைகள் பின்வருமாறு:

1. பள்ளியில் கொடுமைப்படுத்துதலைத் தடுப்பதற்கான திட்டத்தினை ஏற்படுத்தி ஆய்வு மேற்கொள்ளுதல்.
2. கொடுமைப்படுத்துதலைத் தடுப்பதற்கான நிகழ்வுகளை மேற்கொள்ளல்.
3. பணியாளர்கள் / மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கான விழிப்புணர்வுப் பயிற்சி / நிகழ்ச்சிகளை மேம்படுத்துதல்.
5. கொடுமைப்படுத்துதலினால் ஏற்படும் அறிகுறிகளை உற்றுநோக்கிக் கவனித்து விரைவாகவும் உணர்வுப் பூர்வமாகவும் செயல்படுதல்.
6. இக்குழுவில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் தொடர்பு எண்களை மிகத் தெளிவாக பள்ளிவளாகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காட்சிப்படுத்துதல்.

ஆ) பெற்றோர்களின் பங்கினை பெற்றோர்–ஆசிரியர் கூட்டங்களிலும் பள்ளிக் குழுக்களிலும் கட்டாயம் வலியுறுத்த வேண்டும். கொடுமைப்படுத்துதலைத் தடுப்பதற்கான முயற்சிகளில் பெற்றோர்கள் பங்கினை கட்டாயம் ஊக்கப்படுத்த வேண்டும். தங்களின் குழந்தைகள் மூலமாக, தங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட கொடுமைப்படுத்துதல் சார்ந்த எந்த ஒரு செயலையும் குறித்து இரகசிய அறிக்கை அளிக்க (report) அறிவுறுத்தப்படவேண்டும். பள்ளியின் பணியாளர்களுக்கும்ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது முறையாக புத்தாக்கப் பயிற்சிகள் (Orientation Programmes) நடத்தப்பட வேண்டும்.



School Safety Module Final.indd 27 15/10/2024 13:02:13

இ) பள்ளிகளில் கொடுமைப்படுத்துதலைத் தடுப்பதற்கான விழிப்புணர்வும், அதற்குரிய நடவடிக்கை பற்றிய தலைப்புகளை உள்ளடக்கிய முறையான பயிற்சிகளும் கட்டாயமாக ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டும்.



ஈ) சிறு குழந்தைகளுக்கு (younger children) அவர்களின் வயதிற்கு ஏற்றாற்போல் திறம்படப் பேசும் உத்திகளை (Communication Strategies) வளர்க்க வேண்டும். அவர்களிடம் ஏதேனும் சிக்கல் (Problem) உள்ளதா என்பதை அறிந்துகொள்ள ஆசிரியர்கள் அவர்களிடம் உரையாடலில் ஈடுபடவேண்டும். வகுப்பு ஆசிரியர், ஆலோசகர், பள்ளியின் செவிலியர் அல்லது மருத்துவர் போன்றோரின் பங்கு மேம்படுத்தப்படவேண்டும். அதோடு குழந்தைகள் யாருடன் அதுபோன்ற சிக்கல்களை இரகசியமாக பகிர்ந்துகொள்ளலாம் என்பதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

6. ஒருவேளை பள்ளியில் குழந்தைக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் (Sexual abuse) இருப்பின் POCSO சட்டம் 2012 பிரிவு 19(1) மற்றும் 21(2) ன்படி **ஆசிரியர்களும், அக்கல்வி நிறுவனத்தின் நிருவாகமும் இதுபோன்ற பாலியல் வன்புணர்வு சம்பந்தப்பட்ட குற்றங்களையும், நிகழ்வுகளையும் உரிய முறையில் தெரிவிக்க வேண்டும். தெரிவிக்கத் தவறினால் தண்டனை** (Punishment), **அபராதம்** (Fine) **அல்லது இரண்டுமே வழங்கப்படலாம்.**

7. ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுதல் (Safe Touch / Unsafe Touch) பற்றிய விழிப்புணர்வு அளிக்கவேண்டும்.

8. The Juvenile Justice (Care & Protection of Children Act–2015) இதில் சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.




i. குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களால் குழந்தைகளின் மனம் மற்றும் உடல் அளவில் துன்பம் ஏற்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் 75வது பிரிவின் படி யாரேனும் ஒரு குழந்தையின் மீது குற்றம் சுமத்தினாலோ (Charge of), ஆதிக்கம் செலுத்தினாலோ (Control Over), அல்லது குழந்தையைத் தாக்கினாலோ (Assaults), தவறான வழியில் நடத்தினாலோ (Abandon), தவறாகப் பயன்படுத்தினாலோ (Abuses), மறைவான உடல் பாகங்களைக் காட்சிப் படுத்தினாலோ (Exposes) மேலும் இதுபோன்ற தேவையற்ற உடல் மற்றும் மனரீதியான துன்புறுத்தலுக்கு ஆளாகுமளவுக்கு கண்டுகொள்ளாமல் விடப்பட்டாலோ மூன்று வருட சிறைத்தண்டனை அல்லது ஒரு இலட்ச ரூபாய் அபராதம் அல்லது இரண்டுமே வழங்கப்படும். வகுப்பறைகளில் குழந்தைகளுக்கு ஆசிரியர்களே உண்மையில் பொறுப்பானவர்கள் ஆவர்.

ii. பிரிவு 82 (1) இல் குழந்தைகளுக்கு பொறுப்பாக உள்ளவர்கள் அல்லது குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் குழந்தைகளிடையே நன்னடத்தையை


School Safety Module Final.indd 28 15/10/2024 13:02:14

கொண்டு வரும் நோக்கில் உடல்ரீதியான தண்டனைகளை வழங்கினால் முதல் குற்றவாளியாக (On the first conviction) பொறுப்பேற்று ரூ. 10,000/– அபராதம் செலுத்த நேரிடும். அதையே தொடர்ந்து மேற்கொண்டால் 3 மாத சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ அனுபவிக்க வேண்டும்.

உண்டு–உறைவிடப்பள்ளி விடுதிகளில் NCPCR – கையேட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப் படுவதை பள்ளி மேலாண்மை / முதல்வர் / தலைமையாசிரியர் உறுதி செய்ய வேண்டும். பெற்றோர்–ஆசிரியர் கழகம் இல்லாத பட்சத்தில், விடுதிக்காப்பாளர் / விடுதிப்பொறுப்பாளர், விடுதி மாணாக்கர்களின் பாதுகாப்பு சார்ந்த முடிவெடுக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

ஆண்டுதோறும் பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும்போது பள்ளியின் பாதுகாப்புத் திட்டமானது முக்கிய இடம் வகிப்பதை, பள்ளி மேலாண்மை / முதல்வர் / தலைமையாசிரியர் உறுதி செய்ய வேண்டும். மேலும், பள்ளி மேலாண்மைக்குழு / பெற்றோர்–ஆசிரியர் கழகம் / மாணவ பிரதிநிதிகளின் பின்னூட்டம் / ஆலோசனைகளைப் பெறும்வகையில், பள்ளிப் பாதுகாப்புத் திட்டம் பகிரப்பட வேண்டும். மேலும், பள்ளிப்பாதுகாப்புத் திட்டம், பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட அனைவரின் பார்வையில் படும் வகையில் காட்சிப்படுத்த வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழுவானது காலாண்டிற்கு ஒருமுறையேனும் பள்ளிப் பாதுகாப்புத் திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுவதை ஆய்வு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில், NCPCR கையேட்டு நெறிமுறைகள் செயல்படுத்தப் படுவதில் தளர்வுகள் இருப்பின். உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பள்ளி / பள்ளி மேலாண்மைக் குழு மேற்கொள்ள வேண்டும்.

பள்ளி மேலாண்மை / பள்ளி மேலாண்மைக் குழு ஓர் உள்ளடங்கிய குழுவைப் பள்ளியில் அமைத்து, அக்குழு உறுப்பினர்கள் காலாண்டிற்கு ஒரு முறை பள்ளி வளாகத்தை முழுமையாகப் பார்வையிட்டு, TNSCPCR நெறிமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

பாதுகாப்பு பற்றிய கல்வி மாணவர்களின் கற்றல் மற்றும் விழிப்புணர்வுச் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

பள்ளிக் கல்வித்துறை உரிய அலுவலர்களை ஒருங்கிணைத்து SCERT/ DIET வாயிலாக, ஆசிரியர்களுக்கு NCPCR–வரையறையின்படி பள்ளிப் பாதுகாப்பில் ஆசிரியரின் பங்கு மற்றும் பொறுப்பு சார்ந்த பணியிடைப்பயிற்சி தகுந்த இடைவெளிகளில் அளிக்க வேண்டும். இப்பயிற்சிகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அளிக்கப்படுவதுடன் புதிய நெறிமுறைகள் / சட்டங்கள் / கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படும் நேரங்களில் ஆசிரியர்களுக்கு, அது சார்ந்த நோக்குநிலைப் பயிற்சி உடனடியாக வழங்கப்பட வேண்டும். பணியில் புதிதாகச் சேரும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

பள்ளிக் கல்வித்துறை மூலம் பெறப்பட்ட பள்ளிப் பாதுகாப்பு உறுதிமொழி, பள்ளியில் ஆங்கிலம் / வட்டார மொழிகளில் எழுதப்பட்டு மாணவர்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.





School Safety Module Final.indd 29 15/10/2024 13:02:14

பிரிவு
6

# கண்காணித்தல்

பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய பின்வருவனவற்றைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்த சரியான கண்காணிப்பு இருக்க வேண்டும்.

## 6.1 பள்ளி அளவில் கண்காணித்தல்

### 6.1.1 தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியரின் பங்கு

1. பள்ளியின் பாதுகாப்பு அம்சங்களில் கவனம் செலுத்தப் பள்ளித் தலைமையாசிரியரின் தலைமையில் உடன் பணிபுரிவோர், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி ஆலோசகர் உள்ளிட்டோர் கொண்ட குழுவைக் கண்டிப்பாக உருவாக்க வேண்டும்.
2. இக்குழு முதன்மைக் குழுவாகச் செயல்படும். இக்குழுவை தலைமையாசிரியர் வழிநடத்துவார். மூத்த ஆசிரியர்கள், தொடக்க மற்றும் நர்சரிப் பிரிவுகளின் பொறுப்பாளர்கள், பள்ளியின் மாணவத்தலைவர், பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் உறுப்பினர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் படைப் பிரிவின் முகவர்கள் ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆவர்.
3. இக்கையேட்டின் உதவியுடன் ஆசிரியர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறிப்பிட்ட சிக்கல்களை எவ்வாறு கையாள்வது என்பதை வலியுறுத்துதல்
4. குழந்தைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் இக்கையேட்டின்படி உறுதிசெய்திட வெவ்வேறு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான குறிப்பிட்ட பங்கினை ஒதுக்குதல்.
5. பள்ளிகளில் அவசர மருத்துவ நலன்களுக்கான திட்டங்களை வகுத்தல்.
6. பள்ளிக்கட்டடங்களின் பல முக்கியமான இடங்களில் முதலுதவிப் பெட்டியை நிறுவி, அவை எப்போதும் செயலில் இருப்பதை உறுதி செய்தல்.
7. குழந்தைநேய சூழல்களை உருவாக்குதல்.
8. முதலுதவி, நிலநடுக்க ஒத்திகை மற்றும் நெருப்பிலிருந்து பாதுகாத்தலுக்கான பயிற்சிகளை அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு செயல் விளக்கமாக செய்து காட்டுதல்.
9. மாணவர்கள் பள்ளிப்பேருந்தில் பாதுகாப்பாகப் பயணம் செய்வது குறித்தும், பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் சட்டதிட்டங்களைப் பின்பற்றுவது பற்றியும், பயணம் செய்வோரிடமிருந்து பின்னூட்டம் (Feed Back) பெற்று உறுதிசெய்தல்.
10. பெரும் தொற்றுநோய்கள் பற்றி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளியில் பணிபுரியும் பிற பணியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.



School Safety Module Final.indd 30 15/10/2024 13:02:14



### பாதுகாப்பு நெறிமுறைகள்:

❖ கைச் சுத்தம் பேணுதல், அடிக்கடி தொடப்படும் இடங்களைக் கிருமிநாசினி கொண்டு சுத்திகரித்தல்.
❖ உடல் / சமூக இடைவெளியைக் கடைபிடித்தல்.
❖ நோய்த்தொற்றைத் தவிர்க்க சுகாதாரமான பழக்கவழக்கங்கள் மேற்கொள்ளல்.
❖ காய்ச்சலைக் கண்டறிய வெப்பநிலை–மானியைப் பயன்படுத்துதல்.
❖ தொற்று இருப்பதற்கான அறிகுறிகள் இருந்தாலோ அல்லது மருத்துவச் சிகிச்சையில் இருந்தாலோ பள்ளி செல்வதைத் தவிர்த்தல்.
❖ முழு நேரப் பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்கள் / செவிலியர்/ மருத்துவர் மற்றும் ஆலோசகர்களைப் பள்ளியிலோ (அல்லது) எளிதில் அணுகக் கூடிய தொலைவிலோ இருப்பதை உறுதி செய்து மாணவரது உடல் மற்றும் மனநலம் சார்ந்த உதவிகள் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.
❖ அடிக்கடி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

### 6.1.2 பள்ளி மேலாண்மைக்குழு (School Management Committee (SMC))

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் 2009 (RTE 2009) பிரிவு 21 இன் படி பள்ளி மேலாண்மைக் குழுவானது உள்ளாட்சி அமைப்பினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மற்றும் ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

பள்ளி மேலாண்மைக்குழு, சரிபார்ப்புப் பட்டியல் உதவியுடன் பள்ளிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு தகுந்த ஆலோசனைகளை வழங்கலாம். பரிந்துரைகள் நடைமுறைபடுத்தப் படாவிட்டால், பள்ளி மேலாண்மைக்குழு வட்டாரக்கல்வி அலுவலரை (Block Educational



Officer (BEO) அணுக வேண்டும். வட்டாரக்கல்வி அலுவலர் அளவில் குறைகள் நிவர்த்தி செய்யப்படாவிட்டால், மாவட்டக்கல்வி அலுவலருக்கு இந்தப் பிரச்சினை கொண்டு செல்லப்படவேண்டும். மாவட்டக்கல்வி அலுவலர் அலுவலகத்திலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், மாவட்ட நீதிபதியிடம் முறையிடலாம் அல்லது தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (Tamil Nadu State Commission for Protection of Child Rights (TNSCPCR)) அல்லது குழந்தைகளின் உரிமை பாதுகாப்பிற்கான தேசியக் குழுவில் முறையிடலாம்.

### 6.1.3 பெற்றோர்–ஆசிரியர் கழகம்: (PTA)

பெற்றோர்–ஆசிரியர் கழகம், சரிபார்ப்புப் பட்டியல் உதவியுடன் பள்ளிகளில் ஆய்வுகளை மேற்கொண்டு தகுந்த ஆலோசனைகளை வழங்கலாம். பரிந்துரைகள் நடைமுறைபடுத்தப் படாவிட்டால். பள்ளி மேலாண்மைக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளையே குறைகளை நிவர்த்தி செய்ய பயன்படுத்தலாம்.





School Safety Module Final.indd 31 15/10/2024 13:02:14

### 6.1.4 குழந்தைகள்

பட்டியலில் இடம்பெற்றுள்ள பாதுகாப்பு நடைமுறைகளை மாணவர்கள் குழு ஒவ்வொரு காலாண்டிலும் ஆய்வு செய்தல் வேண்டும். அக்குழுவுக்குப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பாதுகாப்பு விதிகள் நடைமுறைப்படுத்தாத போது நேரடியாக தலைமை ஆசிரியரிடமோ அல்லது பெற்றோர்–ஆசிரியர் கழகத்திடமோ எடுத்துரைக்கும் உரிமை உள்ளது.

### 6.1.5 பள்ளி நிருவாகம்

1. பள்ளி நிருவாகம் பள்ளிப் பாதுகாப்பு குறித்து அவ்வப்போது தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து திட்டமிடல் வேண்டும்.
2. பரிந்துரைக்கப்பட்ட பள்ளிப் பாதுகாப்பு நடைமுறைகளில் அலட்சியப்போக்கு கண்டுபிடிக்கப்பட்டால் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009–ன்படி மாநிலப் பள்ளிக் கல்வித்துறையில் உள்ள தகுதி வாய்ந்த அலுவலர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 6.2 வட்டார அளவில் கண்காணித்தல்

**வட்டார அளவில் கட்டகத்தில் உள்ள நடைமுறைகளைச் செயல்படுத்தும் பொறுப்பு வட்டாரக் கல்வி அலுவலரைச் சார்ந்தது.**

## 6.3 மாவட்ட அளவில் கண்காணித்தல்

i. மாவட்ட அளவில் பல்வேறு அரசுத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் கண்காணித்தல் நடைமுறைகளைச் செயல்படுத்துவது மாவட்ட அளவிலான குழுவின் ஒருங்கிணைந்த பணியாகும்.

ii. தேசிய மற்றும் மாநிலப் பாதுகாப்பு உரிமைக்குழுவில் உள்ள அலுவலர்கள், தேவை என்று கருதும் பட்சத்தில் எந்தப் பள்ளியையும் ஆய்வுக்கு உட்படுத்தலாம். ஆய்வு விவரங்களைச் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் தெரியப்படுத்தலாம்.

iii. உரிய அலுவலர்கள் தங்கள் ஆய்வின் போதுக் கண்டறியப்பட்ட குறைபாடுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிவர்த்தி செய்ய நிருவாகத்திற்கு உத்தரவிடுதல் வேண்டும்.

iv. கையேட்டில் உள்ள செயல்பாடுகளை முறையாகப் பள்ளிகளில் செயல்படுத்துவதை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் உறுதி செய்திடல் வேண்டும்.


School Safety Module Final.indd 32 15/10/2024 13:02:14

## 7. குழந்தைப் பாதுகாப்பு – சரிபார்ப்புப் பட்டியல்

| வரிசை எண் | கூற்று | ஆம்/ இல்லை | பின்னூட்டம் |
|---|---|---|---|
| 1. | பள்ளியில் அபாய எச்சரிக்கைக் கருவிகள், பொது அறிவிப்பு செய்வதற்காக மையப்படுத்தப்பட்ட அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளனவா? | | |
| 2. | மாணவர்கள் பள்ளி வாகனங்களில் இருந்து இறங்கிய பின்னர் அவர்களது நிறுத்தத்தை அடையும் வரை பாதுகாப்பாக உடன் செல்ல ஆசிரியர் / பணியாளர் யாரேனும் பள்ளிவாகனத்தில் மாணவர்களுடன் செல்கிறார்களா? | | |
| 3. | பள்ளிவளாகம் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு உகந்ததாக உள்ளதா? | | |
| 4. | பள்ளிக் கல்வித்துறை வகுத்துள்ள நெறிமுறைகளின்படி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் (Health check– ups) முறையாக நடத்தப்படுகின்றனவா? | | |
| 5. | பள்ளி அறைகள் / துணைக் கருவிகள் அடிக்கடி கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படுகின்றனவா? | | |
| 6. | கைகளைக் கழுவும் செயல்பாடுகளை ஆசிரியர் கவனமாக மேற்பார்வையிடுகிறாரா? | | |
| 7. | குறிப்பிட்ட கால இடைவெளியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறதா? | | |
| 8. | பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கான தனித்தனி கழிவறை வசதிகள் உள்ளனவா? | | |
| 9. | அனைத்துக் கழிவறைகளிலும் பயன்பாட்டிற்குப் போதுமான தண்ணீர் வசதி மற்றும் தண்ணீர் வெளியேற்றும் வசதி உள்ளதா? | | |



School Safety Module Final.indd 33 15/10/2024 13:02:14

| | | | |
|---|---|---|---|
| 10. | கழிவறைகளில் சானிட்டரி நாப்கின்கள் (Sanitary Napkins) போன்ற கழிவுகளைச் சுகாதாரமான முறையில் அகற்ற / எரியூட்டத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா? ஆம் எனில், அவை செயல்பாட்டில் உள்ளனவா? | | |
| 11. | கழிவறைக்குச் செல்லும் முன்னரும் பின்னரும் மாணவர்கள் கைகளைக் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்கின்றனரா? | | |
| 12. | முதலுதவிப்பெட்டி குறிப்பிட்ட இடத்தில் வைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறதா? | | |
| 13. | ஆய்வகங்களில் முதலுதவிப்பெட்டி உள்ளதா? | | |
| 14. | மூடப்படாத கிணறுகள்/ குளங்கள் போன்ற நீர்நிலைகள் பள்ளி வளாகத்தில் / பள்ளிக்கு அருகில் இருந்தால் அவை சுற்றுச்சுவர், கம்பித் தடுப்புகளால் பாதுகாக்கப்பட்டுள்ளனவா? | | |
| 15. | பள்ளியில் மின்அமைப்புகள் பாதுகாப்பாக உள்ளனவா? அவற்றின் பாதுகாப்பு அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகிறதா? | | |
| 16. | பள்ளி வளாகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதை பள்ளி உறுதி செய்கிறதா? | | |
| 17. | சத்துணவுத்திட்டச் சமையலறை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் உடையதாகவும், பூச்சிகள் இல்லாமலும் பராமரிக்கப்படுகிறதா? | | |
| 18. | காய்கறிகள் நன்றாகக் கழுவிய பின்னரே பயன்படுத்தப்படுகின்றனவா? உப்பு மற்றும் மஞ்சள் கலந்த தண்ணீரில் அல்லது நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரில் அவற்றைக் கழுவி, மாசுக்கள் மற்றும் கிருமிகள் அகற்றப்படுகின்றனவா? | | |
| 19. | பள்ளிவாகன ஓட்டுநர்கள் பணி அமர்த்தப்படும் முன்னர் காவல்துறையின் சரிபார்ப்புச் சான்றிதழ் பெறப்பட்டதா? | | |
| 20. | பள்ளியில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தொந்தரவுகள் தொடர்பான குறைதீர் குழு அமைக்கப்பட்டுள்ளதா? | | |

| | | | |
|---|---|---|---|
| 21. | அனைத்து ஆசிரியர், ஆசிரியர் அல்லாத மற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள் அனைவருக்கும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தொந்தரவுகள் மற்றும் அது தொடர்பான சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு வழங்கப்படுகிறதா? | | |
| 21. | பள்ளியில் பாலியல் துன்புறுத்தலிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் குழு அமைக்கப்பட்டுள்ளதா? பள்ளியில் பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளதா? | | |
| 22. | ஆசிரியர்களின் மேற்பார்வையின்கீழ் மட்டுமே மாணவர்கள் கணினி அறைகள் மற்றும் மின்னணுத் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துகிறார்களா? | | |
| 23. | இணையவழி குற்றங்கள், சீண்டுதல், துன்புறுத்துதல் போன்றவற்றிற்கு எதிரான சட்டங்களைப் பற்றியும், தங்களது பொறுப்புகளைப் புரிந்து நடந்து கொள்ளவும், மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்களா? | | |



School Safety Module Final.indd 35 15/10/2024 13:02:14

# குறிப்பு



School Safety Module Final.indd 36 15/10/2024 13:02:14